20 காசு

# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

38

அறநிலைய அமைச்சர்
உயர்திரு. K.V. சுப்பையா. B.A.

மயிலை. அ. [illegible]
6.4.1969.

# இருதயத்தில் ஓர் ரோஜா

## முல்லை. சக்தி

[6]

விளக்கின் ஒளி மழையில் நனைந்து கொண்டு நின்றிருந்த நங்கையைக் கண்டதும் ராஜுவின் மனம் படபடவென்று அடித்துக்கொண்டது.

பெண்களைக் கண்டதும் படபடவெனப் பேசும் அவன் நா அசையவில்லை. ஆரணங்குகளின் அழகை அவர்களின் அங்கங்களின் அசைவுகளை விமர்சிக்கும் அவன் வாய் திறக்கவில்லை.

'இவள் இங்கே எப்படி வந்தாள்? எதற்காக வந்தாள்?' நேற்றிரவு நடந்த நிகழ்ச்சிகளுக்குப்பழி வாங்க வந்தாளா? நம்முடைய விலாசம் அவளுக்கு எப்படிக் கிடைத்தது?' என்ற வினுக்கள் அவன் மனத்தில் அலைகள் போல அடுக்கடுக்காக எழுந்தன!

நேற்றிரவு — நள்ளிரவில் — நடுப்பாதையில் தன்னிடம் தகாத முறையில் நடந்துகொண்ட துணிச்சல்காரன், இன்று தன்னைக் கண்டதும் திக்பிரமைப் பிடித்து, திகைப் பூண்டை மிதித்தவன்போல் குழம்பி நிற்பதைக் கண்டதும் அவளும் ஆச்சரியக் கடலில் மூழ்கினுள்!

'மது மனிதனை மிருகமாக்கிவிடுகிறது என்பது எவ்வளவு உண்மை. மது மயக்கத்தில் தன்னிடம் மிகக் கீழ்த்தரமாக நடந்துகொண்டவர் இன்று எவ்வளவு சாதுவாக இருக்கிருர்' என்றுகூட அவளது மனம் வியப்புற்றது!

காலதேவனின் நிமிடக் கரம் அசைந்துகொண்டிருந்தது! அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டே இருந்தார்கள். ஒரு இனம் தெரியாத அமைதி அங்கே நிலவியது!

ராஜு உள்ளே போவதா, இல்லையா என்று யோசித்துக்கொண்டிருந்தான். அவர் ஏன் உள்ளே வராமல் நிற்கிருர் என்று அவள் திகைத்தாள்!

அங்கே நிலவிய அந்த மர்மமான அமைதித் திரையை யார் முதலில் கிழிப்பதென்று இருவருமே சிந்தித்துக்கொண்டிருந்தனர்.

இறுதியில் அவளே பேச ஆரம்பித்தாள், ராஜு வாயைத் திறக்க மாட்டான் தான் பேசும்வரை என்பதைத் தீர்மானித்துக்கொண்டு!

'ஏன் அங்கேயே நின்றுவிட்டீர்கள்? இது உங்கள் வீடுதான்' என்ருள்!

இன்று எந்த போதைத் திரையும் என் கண்களை மறைக்கவில்லை, அகால வேளையில்—தகாத முறையில்–மாற்ருர் வீட்டில் புகுவதற்கு ......இது என் வீடுதான்.....ஆனல் நீ இந்த வேளையில்......இங்கே..... எப்படி......'

''நான் இங்கே எப்படி வந்தேன் என்று கேட்கிறீர்களா... அதுதான் காலம் செய்யும் கோலம்...உள்ளே வாருங்கள் நான் எல்லாவற்றையும் விபரமாகச் சொல்லுகிறேன்.''

மகுடியின் நாதத்துக்குக் கட்டுப்படும் நாகத்தைப்போல, அவன் அவளது பேச்சு நாதத்துக்குக் கட்டுப்பட்டு உள்ளே சென்ருன்!

'சாப்பிட்டீர்களா?' என்று கேட்டு அவள் மீண்டும் அமைதியை அழித்தாள்!

'இல்லை...'

'ஏன்?' உங்களது வழக்கமான உணவு விடுதிகள் இன்று திறக்கவில்லையா?'

'அந்த திசைகளில் நான் திரும்பிக் கூடப் பார்க்கப் போவதில்லை என்று சபதம் எடுத்துக்கொண்டிருக்கிறேன்.'

இந்த பதில் அவளை ஆச்சரியத்தில் மூழ்கடித்தது!

'அப்படியா? எப்படி இவ்வளவு சீக்கிரத்தில் உங்களுக்கு இந்த மன மாற்றம் ஏற்பட்டது?'

'நேற்று நடந்த நிகழ்ச்சி எனக்கு ஒரு நல்ல பாடத்தைப் போதித்துவிட்டது! உன்னிடத்தில் நான் நடந்துகொண்ட தகாத நிகழ்ச்சிக்கு நான் ஒரு பெரும் விலையைக் கொடுத்துவிட்டேன் அதற்குப் பிராயச்சித்தமாக...'

'பரவாயில்லையே...நீங்கள் எந்த நிலையில் வரப் போகிறீர்களோ... உங்களை நான் எப்படிச் சமாளிக்கப் போகிறேனே?' என்று பயந்து நடுங்கிக் கொண்டிருந்தேன்!'

'நான்கூட உன்னைக் கண்டதும், மதுரைப் பாண்டியன் மணிமண்டபத்தில் கண்ணகி கர்ஜித்தாளாமே அதைப்போல நீயும்...என்னென்ன முழங்கப் போகிருயோ என்று எண்ணி நடுங்கிக் கொண்டிருந்தேன்...'

அவள் கலகலவென்று சிரித்தாள், தங்கத் தாம்பாளத்தில் மாணிக்கப் பரல்கள் சிதறுவது போல!

'உட்காருங்கள்! பால் கொண்டு வருகிறேன்' என்று கூறிவிட்டு அவள் உள்ளே சென்ருள்!

போலீஸ்காரனுக்கு அடங்கும் கைதியைப் போல அவனும் அவளது ஆணைக்குக் கட்டுப்பட்டு உட்கார்ந்தான்!

'அவனுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது! யாருடைய ஆணைக்கோ —கட்டளைக்கோ கட்டுப்படாமல் முரட்டுக் குதிரைப்போல் ஓடிக் கொண்டிருக்கும் தன்னை இப்பெண் பம்பரப்போல் சுழல வைக்கிருளே ...அவள் சொல்வதைப்போல் நடக்கிருேமே...ஏன்?...ஏன்? ... அவளது பேச்சில் என்ன மாயசக்தி இருக்கிறது? என் வீட்டில் என்னையே

(4-ம் பக்கம் பார்க்க)

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

மலர் 5 | 6—4—69 | இதழ் 38

# கல்வி என்றால் என்ன? (1)

"கல்வியின் தரம் கெட்டுவிட்டதாகச் சிலர் குறைகூறுகிறார்கள். அறிவுக்குறைவு ஏற்பட்டு விட்டதாக நினைக்கிறார்கள். இந்த நினைப்பை அவர்கள் மாற்றிககொள்ள வேணடும். தரம் தரம் என்று சொல்லி ஏழைக் குழந்தைகளின் படிப்பைக் கெடுத்து விடாதீர்கள்......

"20 ஆண்டுக் காலத்தில் தமிழகத்தில் கல்வியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்."

என்பதாக மதுரை மாவட்டம் — திருச்சுழியில் உயர் நிலைப்பள்ளி ஒன்றைத் திறந்துவைத்து கருத்துரை யாற்றியிருக்கிறார் காமராசர். அவரது பேச்சிலிருந்து நமக்குச் சில சந்தேகங்கள் பிறக்கின்றன.

(1) கல்வியின் தரம் கெட்டுவிடவில்லை என்று அவர் கூறுகிறாரா?

(2) கல்வித் தரம் கெட்டிருப்பதனால் அறிவுக் குறைவும் ஒழுக்கக் குறைவும்—அக்கறைக் குறைவும் ஏற்பட்டிருக்கவில்லை என்று அவர் ஒப்புக்கொள்கிறாரா?

(3) கல்வியானது, தரமுடையதாக இருக்கக் கூடாது என்பது அவரது விழைவா? அல்லது இப்போதிருப்பதுதான் தரமான கல்வி முறை என்பது அவரது வாதமா?

காமராசர் இதற்கெல்லாம் பதில் சொல்ல முன்வரமாட் டார். நகராட்சி மன்றத் தேர்தலுக்காக அவர் நிறைய சிந்தனை செய்யவேண்டியிருக்கிறது. நாம் அதுபற்றி ஆராய்ந்து பார்க்கவேண்டியவர்களாக விருக்கிறோம். காரணம், காமராசர் — தமிழகத்தில் எட்டாண்டுக் காலம் முதலமைச்சராகவிருந்தவர். மத்திய அமைச்ச ராகவோ, துணைப்பிரதமராகவோகூட ஆகக்கூடும் என்ற ஹேஷ்யங்களுக்கு ஆளாகி இருந்தவர். அல்லா மல், அவர் முதலமைச்சராகவிருந்த காலத்தில் இந்த நாட்டு ஏழை எளிய மக்களது கல்விக்கண்ணைத் திறந்தவர் என்று இப்போதும்கூட சிலரால் பாராட்டப் பட்டுக்கொண்டிருப்பவர்.

காமராசர், முதலமைச்சராகவிருந்த காலத்தில் கண்ணை மூடிக்கொண்டு பள்ளிக்கூடங்களைத் திறந்து வைத்துக் கொண்டிருந்தது என்னவோ உண்மைதான். திறக்கப்பட்ட பள்ளிகளுக்கு மாணவர்கள் வந்து சேர்ந் தார்களா? என்பதெல்லாம் இப்போது விவாதத்துக்குத் தேவையற்றதாகும்.

தமிழ் நாட்டின் கல்விப் பெருக்கத்துக்கு காமராசர் காரணமாக விருந்திருக்கிறார் என்ற பெருமையைத் தாராளமாக நாம் அவருக்குத் தருவதில் தவறேது மில்லை, அந்தப் பெருமைக் குரியவரான அவர், இப்போது உகுத்திருக்கின்ற கருத்துரைகள் சரியான அடிப்படை கொண்டவையா என்பதை ஆராய்ந்தே தீரவேண்டும்

தமிழகத்தின் தனிச் சிறப்புக்குரிய சென்னைப் பல்கலைக் கழகம், இந்தியத் துணைக் கண்டத்திலேயே இரண்டாவது இடத்தைப் பெற்றிருந்த நிலையிலிருந்து தலைகுப்புற விழுந்து, இப்போது எட்டாவது இடத்தில் வந்து நிற்கிறது என்பது ஒன்றே போதும் கல்வி, தரங் கெட்டுக் கிடக்கிறது என்பதற்குக் காட்டுகிற காரணம்.

பல்கலைக் கழக மட்டத்திலேயே இந்தச் சரிவு ஏற்பட்டிருக்கிறது என்கிறபோது கீழ்மட்டக் கல்விகள் பற்றி என்ன சொல்ல வேண்டும் என்று காமராசர் நினைக்கிறாரோ தெரியவில்லை.

"கல்விக்கூடங்களில் அறிவுக் குறைவு ஏற்பட்டு விட்டதென்றும் சிலர் கூறுகிறார்கள்" என்று அவர் கூறுவதிலிருந்து இந்தக் கருத்தை அவர் ஒப்புக்கொள்ள வில்லை என்பதுதான் பொருளாகிறது.

சென்னையில் கடந்த கிழமை ஒரு கல்லூரியில், தேர்வு எழுதாமலேயே மேல்வகுப்புக்கு அனுப்பப்பட வேண்டும் என்று கோரி வேலைநிறுத்தம் [படிப்பு நிறுத் தம்தான்!) செய்திருக்கிறார்கள்.

கல்விக் கொள்கை என்பது முழுக்க முழுக்க அர சாங்கத்தினுடையதாகத்தானிருக்க வேண்டும். அர சாங்க முடிவானது பொதுமக்களது கருத்தினைப் பிரதி பலிப்பதாக விருக்கவேண்டுமே யல்லாமல், அந்தக் கொள்கையினை வகுத்துக் கொடுப்போர், எந்தக் கார ணத்தாலும் மாணவர்களாக விருக்கக்கூடாது.

எடுத்துக் காட்டுக் கூறவேண்டுமென்றால், தமிழ்ப்போதனா மொழி வகுப்பில் சேர்ந்து கொண்ட தன் பின், தங்கட்கு ஆங்கிலபோதனை செய்யவேண் டும் என்று தொடங்கிய மாணவர் கிளர்ச்சி ஒன்று போதும்! இவையெல்லாம், மாணவர் உலகு—தம் நிலை யிலிருந்து பிறழ்ந்துவிட்டிருக்கிறது; செலுத்தவேண்டிய கவனத்தை வேறு திசையிலே செலுத்தும்படியாகத் திருப்பிவிடப்பட்ட அரசியல் 'சித்து' விளையாட்டுக் களின் எதிரொலிகள்! என்பதற்கான எடுத்துக்காட்டு கள்.

கல்வி என்பது நாடெங்கும் பரவலாக இருக்க வேண்டும் என்ற கருத்து ஏற்புடையதுதான். ஆனால் பரவலாக விருக்கவேண்டும் என்று எடுத்துக்கொள்ளப் பட்ட முயற்சிகளின் பின் விளைவுகள்தான் இன்றைய இந்த விபரீத நிலைமைகளுக்குக் காரணம் என்பதனை, கற்றறிந்தார், சிந்தனையாளர் யாரும் மறுக்கமாட்டார் கள். கொச்சைப் பழமொழியொன்றின் மூலம் எடுத்துக் காட்ட வேண்டுமென்றால், "அகல உழுவதினும், ஆழ உழு" என்பார்கள்!

அரை நாளில் ஐம்பது ஏகர் நிலத்தை அகலமாக உழுது, அதன் மூலம் விளைந்து கிடைக்கிற உற்பத்தியை விட, ஆழமாக உழுது இருபத்தைந்து ஏகராவில் கிடைக்கும் உற்பத்தி அதிகமானதாகவிருக்க முடியும் என்பது பழமொழியின் படிப்பினை.

கல்வியென்பது, 'அரிநமோத்து சிந்தம்' என்று தொடங்குகிற அட்டையை எடுத்து அ. ஆ. இ. ஈ. என்று படித்துவிடுவது மட்டுமேயல்ல. சீதையின் சட்டையை, ராமன் இழுத்தான் என்ற மூன்றும் வகுப் புப் பாடப் புத்தகத்தை எடுத்துப் படித்துக்காட்டுவது மல்ல!

கல்வி என்பது ஒரு தத்துவம்!
கல்வி என்பது ஒரு தலைமுறை!
கல்வி என்பது ஒரு வாழ்க்கை முறை!

இதனை அடுத்த கிழமை ஆராய்வோம்!

உ-ம் பக்கத் தொடர்ச்சி

ஆட்டிவைக்கிருளே? இவள் யார்? வானத்தில் பறக்கும் பறவையைப் போல், என் வீட்டில் சுதந்திரமாகப் பறக்கும் இந்த தங்கப் பறவை யார்? யார்?' என்ற விஞக்கள் அவனது மனதில் வெடித்துக்கொண்டே இருந்தன!

பாலைக் கொண்டு வந்தாள் அந்தப் பாவை! பால் பொங்கும் நிலவே, மங்கை வடிவத்தில் வருவதுபோல இருந்தது அவனுக்கு!

'என்ன ஆழ்ந்த யோசனை.........' என்று கேட்டவாறே அவள் பால் கோப்பையை அவன் முன் வைத்தாள்!

'உன் பேச்சை விடவா இந்தப் பால் இனிக்கப் போகிறது' என்று அவன் சொல்ல எண்ணிஞன். ஆனல் பாவம் அவன் எண்ணத்தை நா எதிரொலிக்கவில்லை!

'உங்களை ஒன்று கேட்கலாமா...?' என்று பீடிகைப் போட்டான் ராஜு.

'நேற்று...முன்பின் தெரியா என்னிடத்தில் ஏதேதோ கேட்டீர்களே...இன்று...உங்கள் வீட்டில்... கேட்பதற்கு ஏன் இவ்வளவு தயக்கம்...என் அனுமதி எதற்கு...?

'தயைசெய்து என்னை மன்னித்து விடுங்கள்...உங்களைத் தேடிவந்து ...எப்படியாவது உங்களைக் கண்டு பிடித்து.........மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று இருந்தேன்......... ஆண்டவனே பக்தனைத்தேடி வந்ததைப்போல நீங்களே என்னைத் தேடி வந்துவிட்டீர்கள்!

'ஆண்டவன் பக்தனைத் தேடி வந்தால், பக்தனுக்கு நல்ல வரம் கிடைக்கும் அல்லது பக்தன் சோதனைக்குப் பலியாவான்! நான் உங்களுக்கு வரம் அளிக்கவும் வரவில்லை, சோதனை செய்யவும் விரும்பவில்லை!'

'மிகவும் நன்ருக பேசுகின்றீர்கள்'

'எனக்கு இந்த 'கள்' எல்லாம் பிடிப்பதில்லை... உங்களுக்கு...'

'நேற்றுவரை தேனக இனித்தது; இன்று வேம்பாகக் கசக்கிறது'

'அப்படி என்ருல், என்னிடத்தில் பேசும்போது 'கள்'ளை ஏன் சொல்லுகிறீர்கள்...என்னை நீ என்றே அழைக்கலாம்...'

'உங்களிடத்தில்...இல்லை இல்லை ...உன்னிடத்தில் எனக்கு அவ்வளவு உரிமையா...'

'உரிமைப் பிரச்சனைக்கே இடமில்லை...நீங்கள் என்னைவிட உயர்ந்தவர்—வயதில்—படிப்பில்...அந்தஸ்தில்...நான்...உங்கள் வேலைக்காரி தானே...'

'வேலைக்காரியா...? நீங்கள்......'

'பார்த்தீர்களா...மீண்டும் இந்தக் 'கள்' வருகிறது...கள்ளின் மோகம் இன்னும் தீரவில்லையா...?'

'தப்பு—தப்பு......புதிர்மேல் புதிர் போடாதே...உன்னை இங்கே கண்டதும்—நீ பேசுவதும் எனக்கு விடுகதையாக இருக்கிறது...விடையைச் சொல்லி என் சந்தேகத்தை...'

'நான் உங்கள் வேலைக்காரர் வேலைய்யாவின் பேத்தி...அவருக்கு உடல் நலம் சரியில்லை. நீங்கள் வரும்போது அவர் இல்லாமல் வீடு பூட்டிக்கிடந்தால் நீங்கள்கோபிப்பீர்களே என்று என்னை அனுப்பிவைத்தார்! இங்கே வந்தபின்—இங்கே அலங்கரிக்கும் உங்கள் புகைப் படங்களைக் கண்டு...நேற்றைய நிகழ்ச்சி என் நினைவுக்கு வந்து நடு நடுங்கிக் கொண்டிருந்தேன்! ஆனல்...'

'ஆனல்...'

'உங்களைக் கண்டபின் நீங்கள் எவ்வளவு நல்லவர்—உயர்ந்தவர் என்று புரிந்துக் கொண்டேன். மது அரக்கன் பிடியில் சிக்கி உங்கள் நல்ல குணத்தையே இழந்துக் கொண்டு இருந்திருக்கிறீர்கள் என்பதையும் அறிந்து வருந்தினேன். அந்த அரக்கனையும் துரத்திவிட்டீர்கள் என்று அறியும்போது என் மகிழ்ச்சி எல்லையை மீறுகிறது!!

'வேலைய்யாவின் பேத்தியா நீ... சேச்சே...உன்னிடத்தில் நான் எவ்வளவு தவருக நடந்துக்கொண்டேன்...உன்னைப்பார்க்கவேஎனக்கு வெட்கமாக இருக்கிறது ...வேலைய்யாவுக்குத் தெரிந்தால்...சே...

'கவலைப்படாதீர்கள்.........தாத்தாவுக்கு இந்த விஷயம் தெரிய நான் அனுமதிக்க மாட்டேன். நீங்களும் இதனை நினைத்து நினைத்து வருந்த வேண்டாம்! தவறுவது மனித சுபாவம்; நீங்களோ திருந்திவிட்டீர்கள். கடந்த காலத்து நிகழ்ச்சிகள் அழிந்த கோலங்கள்தானே!'

'உங்கள் தாத்தா என்னை வளர்த்து ஆளாக்கினர். நீயோ என்னை மனிதனுக்கிவிட்டாய்...... உனக்கும், உன் தாத்தாவுக்கும் நான் என் ஜீவிதக் காலம் வரை கடமைப்பட்டவன்...'

'என்னை அவ்வளவு உயர்ந்த பீடத்தில் அமரச் செய்யாதீர்கள். உங்கள் குடும்பம் எங்களுக்கு எவ்வளவோ செய்திருக்கிறதென்று தாத்தா அடிக்கடிக் கூறுவார். ஆகவே நாங்கள் ஏதாவது செய்தால் அது செய் நன்றியாகத்தான் இருக்கும்...'

'உன் பெயர்...'

'லட்சுமி...'

'பொருத்தமான பெயர்...'

(16-ம் பக்கம் பார்க்க)

## ஐக். மறைவு

கடந்த கிழமை, அமெரிக்காவின் முன்னுள் குடியரசுத் தலைவராகவிருந்த ஜெனரல் ஐசன் ஹோவர், மறைந்துவிட்டார். 78 வயதான அவர், தமது இறுதிக் கட்டத்தில் மிக ஆபத்தான பல மாரடைப்புக்களைச் சந்திக்கவேண்டியவராஞர், கடந்த ஓராண்டில் மட்டும் ஏழு முறை மாரடைப்பு அவருக்கு ஏற்பட்டு, டாக்டர்களது மிகச் சிறந்த மருத்துவத் திறமையால் காப்பாற்றப்பட்டிருக்கிருர் என்றும் இரு கிழமைகளுக்குமுன் செய்யப்பட்ட ஒரு ஆபரேஷன் தொடர்பாக கவலைக்கிடமான நிலையேற்பட்டு, இறுதியில் நோயின் கடுமைக்கு பலியாகிப்போய் இருக்கிருர்.

யு. எஸ். முன்னுள் ஜனதிபதியான ஐசன்ஹோவருக்கு, அமெரிக்க நாடு மட்டுமல்லாமல் அனைத்துலகும் வீர வணக்கம் செய்ய கடமைப்பட்டுள்ளது. இரண்டாவது உலகப் போரின்போது, போரின் தலைமையையேற்று, வியப்புக்குரிய அவாது ஆற்றலை இன்றளவும் வையம் வியக்கிறது. அதோடு பிற நாடுகளோடு நல்லிணக்கம்கொண்டிருந்த அவரது மாண்பு அவரை என்றென்றும் மேற்படியிலே உயர்த்தி வைக்கக்கூடியதாகும்.

உலகப் பெரும்போர் ஒன்றுக்குத் தலைமையேற்று நடத்திய பெருமைக்குரியவர் அவர் என்ருலும் அவர் இறுதி வரையில் போரின் வெறித்தனத்தை வெறுத்து வந்திருக்கிருர் என்பதற்கு அவரது பேச்சுக்கள் நல்லுதாரணமாக இருக்கின்றன.

இவ்வளவு பெருமைக்குரிய ஒருவரது இழப்பு அமெரிக்காவுக்கு ஈடு இணையற்ற இழப்பு என்பதை யாரே மறைக்கவல்லார்?

# தம்பி

சவு இரக்கம் காட்டமாட்டான்; எதிர்த்திடத் துணிந்தோரை மட்டுமல்ல ஏனய்யா இந்த அக்ரமம் செய்கிறீர், உமக்கு நான் என்ன கேடய்யா செய்தேன் என்று கேட்டாலும் போதும், அவர்களையும் அடித்து நொறுக்குவான்; பெண்களின் அழுகுரல் கேட்டு மனம் பதறமாட்டான், பச்சிளங் குழந்தைகளின் மழலை கேட்டு இன்புறவுமமாட்டான், பயந்து அக்குழவிகள் அழுது துடித்திடும்போது மனம் இளகமாட்டான்; இரத்தம் ஆறென ஓடும், கண்டு கலக்கம் கொள்ளமாட்டான்; குடிசைகளைக் கொளுத்துவான்; நெருப்பில் வீழ்ந்தோர் அலறித் துடிப்பர், அவன் அது கண்டு இரக்கம் காட்டமாட்டான்; வெற்றி ஒன்றுதான் அவன் குறிக்கோள்; எதிர்ப்பட்டோர் அனைவரும் தனக்கு அடிபணிந்தாகவேண்டும், இல்லையேல் தன் வல்லமையை அவர்கள் காணவேண்டும், அழிந்தொழிய வேண்டும் என்றே எண்ணுவான்; கொடுநோய் எங்ஙனம் குமரியாயினும் குழவியாயினும் குடுகுடு கிழவராயினும், இரக்கம் காட்டாதோ, அதுபோலவே, எவர்பாலும் இரக்கம் கொள்ளாது அழிவை உமிழ்ந்த வண்ணம் இருப்பான்; காட்டுத் தீ போலப் பரவி, பயங்கர நாசத்தை விளைவிப்பான்.

செங்கிஸ்கான், தைமூர் போன்றவர்கள் குறித்து இவ்விதம் கூறப்பட்டிருக்கிறது. அழிவினை அவர்கள் ஏவிஏவி, உலகில் பல்வேறு இடங்களிலே அச்சத்தை மூட்டி விட்டனர்; அந்த நகரம் நாசமாக்கப்பட்டது. இத்துணை ஆயிரம் மக்கள் வெட்டி வீழ்த்தப் பட்டார்கள்; பெண்கள் சிறைபிடிக்கப் பட்டார்கள். சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டனர் என்ற 'செய்தி'கள் பரவிப் பரவி, தைமூர் வருகிறான், என்று எந்தக்கோடியிலிருந்தாவது வதந்தி கிளம்பினலும் போதும், பீதி கொண்ட மக்கள் பேழை வேண்டாம் பிழைத்தால் போதும் என்று ஓடிப்போவர், தங்கள் இல்லங்களையும் உடைமைகளையும் விட்டுவிட்டு! முதியவர்களை விட்டுவிட்டு வாலிபர்கள் ஓடிப்போன சம்பவங்களும் உண்டு. எப்படியேனும் பிழைத்துக் கொள் என்று மனைவிக்குக் கூறிவிட்டு தன் உயிரை மட்டும் காப்பாற்றிக்கொண்டால் போதும் என்று ஓடிவிட்ட 'கணவன்' கூட இருந்திருக்கிறன்!!

## நாசமாகிவோம்!

(1)

இவ்வளவும், அச்சத்தின் விளைவு.

அழிவின் மூலம் அச்சத்தை மூட்டிவிடுவது; அந்த அச்சம் பிடித்தாட்டும் நிலையை உண்டாக்கியதும், அந்த நிலையையே வெற்றிக்குக் கருவியாக்கிக்கொள்வது, என்பது அந்த வெறியர் கையாண்ட முறை.

ஐயயோ! அவனை யார் எதிர்த்து நிற்கமுடியும்?

அடே அப்பா! அவன் பழிபாவத்துக்கு அஞ்சாதவனுயிற்றே!

படுகொலைதானே அவனுக்குப் பஞ்சாமிர்தம்! சித்திரவதை செய்வதுதானே அவனுக்குப் பொழுதுபோக்கு!

வெறிநாய்கள் துரத்தும்போது நாம் என்ன செய்ய முடியும்! — என்றெல்லாம் பீதி கொண்ட நிலையில் மக்கள் பேசுவர். இந்த 'பீதி'யே பிறகு, இந்தப் பேயர்களுக்கு மேலும் வெற்றிகளை, சிரமமின்றிக் கிடைத்திடச் செய்தது.

6.4.69.

# அச்சமூட்டியே அறுவடை செய்தனர்!

அந்த நகரம் வீழ்ந்துபட்டது, இந்த ஊர் அடிபணிந்தது; அங்கோர் அணிநகரம் அழிந்துபட்டது, அந்த எழிலூர் சுடுகாடாகிவிட்டது — என்று சேதிகள் பரவின; அந்த நகர்களெல்லாம் அவ்விதம் அதோகதியான பிறகு, நமது நகர்மட்டும் அந்த நாசகாலனை எதிர்த்து நின்று தாக்குப்பிடிக்கவா முடியும்? தப்பிப் பிழைத்தோடிப் போவோம்! என்று விரண்டோடிப் போவர்; வெறியனின் படைகள் போரிடாமலே வெற்றி பெற்று, நகரங்களில் நுழைந்து, உடைமைகளைக் கொள்ளையிட்டுச் செல்லும்.

தைமூர், செங்கிஸ்கான் போன்றோரின் நாட்களிலே, 'பீதி' எப்படி மக்கள் மனதை அலைக்கழித்து அவர்களை மேலும் கோழைகளாக்கிவிட்டதோ, அதே 'பீதி' ஜனநாயகமும் நாகரிகமும் மேலோங்கியுள்ள இந்த நாட்களிலே அடியோடு பட்டுப்போய்விட்டது என்று கூறுவதற்கில்லை.

பெர்லினில் கிளம்பிய பேய்க்குரல் கேட்டு, இங்கு பீதிகொண்டலைந்தவர்களைக் கண்டோமல்லவா!

ஹிட்லர், தன் வீரதீர பராக்கிரமத்தைக் கொண்டுதான், பெரும் பெரும் வெற்றிகள் கொண்டான் என்பதல்ல, அவனை எதிர்த்து நிற்கமுடியாது; அவன் அசகாயசூரன் மட்டுமல்ல, 'அருள்' அவனுக்குத் துணை நிற்கிறது, அவன் படை பெருநெருப்புப் போன்றது. புகுந்த இடம் பொசுங்கிப்போகும் என்று பல்வேறு நாடுகளிலே 'பிரசாரம்' பலமாகப்பரவிற்று, வெற்றி அவனைத் தேடிவந்து, 'சரண்' அடைந்தது.

சூறுவளிப் படை — என்று பெயரே ஏற்பட்டுவிட்டது.

படையிலே உள்ளவர்கள் அனைவரும், உயிர் குடிப்பதிலே தேர்ச்சி பெற்றவர், அவர்களின் போர் முறையே இதுநாள் வரையில் உலகு காணாதது என்றெல்லாம் பேசப்பட்டது. இதனால் கிளம்பிய பீதி ஐரோப்பாவிலும் பிற இடங்களிலும் பரவி, உலகையே ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டது; கண்டோமல்லவா!

அதுபோலவே, ஆனால் பயங்கரத்தோற்றத்துடன் அல்ல, காங்கிரஸ் கட்சி அச்சமூட்டிவிட்டிருக்கிறது.

நல்லாட்சி நடத்துவதற்கான வாய்ப்பு அளிக்கப்படாமல், ஆங்கிலரிடம் சூத்திரக்கயிறு சிக்கிக்கிடந்த நிலையில் நீண்டகாலம் ஆட்சிப் பொறுப்பினை ஜஸ்டிஸ் கட்சி ஏற்று நடத்திவந்தது; வெளியே இருந்துகொண்டு 'வீராவேசம்' காட்டியும் பழி பல சுமத்தியும் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் மீது மக்கள் வெறுப்பும் ஆத்திரமும் கொள்ளச் செய்யமுடிந்தது; இந்தச் சூழ்நிலையை உண்டாக்கிவைத்ததால், தேர்தலில் காங்கிரஸ் ஈடுபட்டதும், பெரும் தலைவர்களை வீழ்த்த முடிந்தது.

அப்போது, நாடெங்கும் கிளம்பிய பேச்சு, அரசியல் உலகிலே புதியதோர் சூழ்நிலையை உருவாக்கிற்று.

பித்தாபுரம் மகாராஜா தோற்றார்
வெங்கிடகிரி ராஜா தோற்றார்
பொப்பிலி ராஜா தோற்றார்
ஏலேலசிங்கப் பிரபு தோற்றார்
கோடீஸ்வரர் கோபாலபூபதி தோற்றார்

என்று இவ்விதமான சேதிகள் வெளிவந்தன.

சீமான்களும் சிற்றரசர்களும், இலட்சாதிகாரிகளும் மிட்டாமிராசுகளும் எப்படிப்பட்ட செல்வாக்கினை பரம்பரை பாத்யதையாக, தலைமுறை தலைமுறையாகப்பெற்றவர்களாயினும், காங்கிரசிடம் எதிர்த்து நிற்கமுடியவில்லை, தோற்றோடுகிறார்கள்; இலட்சக்கணக்கிலே பணத்தை வாரி வாரி இறைத்துப் பார்த்தனர், ஜரிகைக் குல்லாய்க்காரர் படையே கிளம்பி, மக்களிடம் 'ஓட்டு' கேட்டு மிரட்டியும் மயக்கியும் பார்த்தது; ஓட்டுக்குப் பணம் கொடுத்தும் பார்த்தனர்; எதுவும் பலிக்கவில்லை; மக்கள் புதியதோர் எழுச்சி பெற்றனர்; எத்தர்களின் தித்திப்புப் பேச்சுக் கேட்டு ஏமாளிகளாகமாட்டோம், எம்மை ஆள்வதற்கான அதிகாரத்தை இந்த ஆள்விழுங்கிகளுக்குத் தரமாட்டோம்; மிரட்டினால் பணிந்து விடமாட்டோம்; மயக்கினால் ஏமாந்து போகமாட்டோம்; காங்கிரசுக்குத்தான் எமது ஓட்டு! என்று கூறினர், காங்கிரசை எதிர்த்தோர் அனைவரும், படுதோல்வி அடைந்தனர்.

மண்ணைக் கவ்வினர்! படு தோல்வி அடைந்தனர்! முகத்தில் கரி பூசப்பட்டது! மூக்கு அறுக்கப்பட்டது! மூலையில் துரத்திவிட்டனர்! முக்காடிட்டுச் சென்று ஓடினர்! காங்கிரஸ் தேர்க் காலில் சிக்கிய சீமான்கள் கூழாகிப் போயினர்! — இவ்விதமெல்லாம் வெற்றிபற்றிய பிரதாபம் பரப்பப்பட்டது; இது மூட்டிவிட்ட அச்சம், பலரை அரசியலைவிட்டு ஓடிவிடச் செய்தது; பலர், 'பாதுகாப்பான இடம், பலம் பொருந்திய இடம்' என்று வாதிட்டனர். பலம் பொருந்திய இடம், காங்கிரஸ் கட்சி, எனவே அதிலே சென்று தங்கிவிட்டால் பயமில்லை என்று கருதினர்; அதுபோலவே செய்தும் காட்டினர்.

காங்கிரசை எவராலும் எதிர்த்து வெற்றி பெறமுடியாது — எப்படிப்பட்ட கனதனவான்களெல்லாம் தோற்றோடினர் தெரியுமா!—என்று பேசத் தலைப்பட்டனர். அச்சம் புகுந்தது—அடிபணிந்து விடுவதும், இச்சகம் பேசுவதும், இளித்துக்கிடப்பதும் பிழைக்கும் வழி என்று மேட்டுக் குடியினர், மேனாமினுக்கிகள், துரைத்தனத் துதி பாடகர்கள் கருதினர்—காங்கிரசில் நுழைந்தனர்.

தேர்தலில், காங்கிரஸ் பெற்றவெற்றிக்குக் காரணம் என்ன? தோற்றவர்களுக்கும் தொடர்பு எவ்வண்ணம் இருந்தது? தோற்றவர்கள் தமது கட்சியினை எந்த முறையில் அமைத்திருந்தனர்? கட்சித் தொண்டர்கள் எவ்வளவு கசப்புடன் உழன்று கொண்டிருந்தனர்? என்பனபற்றி எண்ணிப் பார்த்திட அச்சம் இடம்தரவில்லை! காங்கிரசை எதிர்க்க முடியாது—எதிர்ப்போர் பிழைக்க முடியாது — சந்தேகமிருந்தால், பித்தாபுரத்தைப் பார், பொப்பிலியைக் கவனி, சீமான்களின் கதியைப் பார், சிற்றரசர்கள் தோற்றோடின சேதியைக் கேள்!—என்று கூறினர்.

பீதி பிடித்துக்கொண்டது; இந்தச் சூழ் நிலையை வாய்ப்பாக்கிக் கொண்டு, காங்கிரஸ், தேர்தல் களத்திலே மேலும் பல வெற்றிகளைப் பெற்றது; அந்த வெற்றிகள், மற்ற மற்றக் கட்சிக்காரர்களின் மன மருட்சியை அதிகமாக்கிற்று, இனி நமக்கு ஈடும், எதிர்ப்பும் இல்லை, —என்று இறுமாந்து கிடந்திட முடிந்தது காங்கிரஸ் கட்சியினால்.

ஆளும் கட்சியிடம் எவர் தட்டிக் கேட்க முடியும் என்ற இறுமாப்பும், மற்றக் கட்சிகளிடம், காங்கிரசை

# கானமயிலாட கண்டிருந்த வான்கோழி...

எவ்விதம் எதிர்த்து நிற்க முடியும் என்ற அச்சமும், ஒருசேர இருந்துவிட அனுமதித்துவிட்டோமானால் தம்பி, பிறகு நாட்டிலே சர்வாதிகாரம் தலைவிரித்தாடுவதைத் தவிர்த்திட முடியாது. சர்வாதிகாரம் ஏற்பட்டு விட்டால், அரசியல் நடவடிக்கை பற்றிய எண்ணம் கூட மக்களுக்கு எழாது — எழ விடமாட்டார்கள்! இந்தப் பயங்கரச் சூழ்நிலையை ஒழித்தாக வேண்டுமானால், அச்சத்தைத் துடைத்துக்கொண்டு. அல்லல், அவதி, ஆயாசம் கொள்ளாமல், ஜனநாயகக் கடமையைச் செயவதற்கு, கட்சிகள் துணிவுகொள்ள வேண்டும், நாம், தேர்தலில் ஈடுபட முடிவு செய்தது, இந்த நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டு தான் என்பதை மறவாதே!

நாம் இந்த முடிவு எடுக்கா முன்பு காங்கிரஸ் கட்சி இந்த முறை, தேர்தல் என்பது, மிகச் சாதாரணமான நிகழ்ச்சியாக இருக்கப் போகிறது, எதிர்ப்பு அதிகம் எழாது, பல இடங்களில் 'போட்டி'யே இருக்காது, என்று மனப்பால் குடித்தது. காங்கிரசின் தலைவர்கள், தமக்குப் புதிய நேசமும் பாசமும், கூட்டுறவும் கிடைத்திருப்பதால், புதிய பலம் கிடைத்துவிட்டது, எனவே தேர்தலைக் குறித்துக் கவலைப்படத் தேவையேயில்லை, கேட்டால் தருகிறார்கள், வேறு யார் இருக்கிறார்கள் எதிர்த்து 'ஓட்டு'க் கேட்க, என்று எண்ணி இருந்தனர்.

இப்போது, தம்பி, சென்னை முதலமைச்சர், 'தேர்தல் பிரசார காரியாலயம்' துவக்கிவிட்டார்! நிதி அமைச்சர், பிரசார முறைகள் பற்றிய யோசனைகளைக் கூறிவிட்டார்! தரகர்கள் திக்கெட்டும் கிளம்பிவிட்டார்கள்! ஆட்பொறுக்கும் அலுவலில் அனுபவம் பெற்றவர்கள்; பணம் இருக்கும் இடத்தை மோப்பம் கண்டு பிடித்துக் கூறுபவர்கள், பஞ்சதந்திரம் அறிந்தவர்கள், பாசவலை வீசுவோர், நேசக்கரம் தேடுவோர், வாக்களித்து வளையவைப்போர், எனும் பல்வேறு துறையினர், கிளம்பிவிட்டனர்!

ஒருகை பார்க்கிறேன் என்போரும், ஒழித்துக் கட்டுகிறேன் என்று உறுமுவோரும் சிண்டு முடிந்துவிடுவேன் என்று செப்புவோரும், காலைவாரிவிடுவேன் என்று கூறுவோரும் ஊரூராகச் செல்கிறார்கள்.

'முதலியார்வாள்! நாயுடுகாருக்குச் சொல்லுங்கள், படையாச்சி நம்மபக்கம்தான் என்று! ரெட்டியார் பக்கம் நான் சாய்ந்து விடுவேன் என்று கோனார் பேசினதாகப் பிள்ளை கூறினார், நீங்கள் அதை எல்லாம் நம்ப வேண்டாமென்று சொல்லுங்கள்; நம்ம நாடார் ஒருபோதும் சொன்ன சொல்லைத் தவறமாட்டார்; அதெல்லாம் ஐயர் ஐயங்கார் வேலை என்பதை விளக்குங்கள்; கவுண்டர் போட்டிக்குக் கிளம்புவாரோ என்று சந்தேகம் வேண்டாம்; அவர் விஷயமாக தேவர் கூறிவிட்டார்" என்று இப்படி, தேசியக் கட்சி, 'ஜாதீயம்' பேசிக்கொண்டு படை திரட்டிக் கொண்டிருக்கிறது.

இவரை நிறுத்தினால் அவருக்குக் கோபம் வருமோ?

இவருக்கு அவர் வேண்டியவரா?

இவர் அவருக்குப் 'பாக்கி' சேர வேண்டுமாமே, உண்மைதானா? என்ற ஆராய்ச்சிகள் மும்முரமாக ஆரம்பித்துவிட்டன!! இதற்காகவே தனிப் பயிற்சி பெற்றவர்கள் சுறுசுறுப்பாகிவிட்டனர்.

'செங்கிஸ்கான் வருகிறானாமே' ஐயோ, செத்தோம் —என்று பீதியுடன் பேசிய நிலை போய்விட்டது, செங்கிஸ்கான் வரட்டும் அவன் செவிட்டில் அறைகிறேன் என்று சின்னப்பயல் சீறிப் பேசுகிறானாமே செச்சே! நாம் பயந்து சாவதா, நாமும் எதிர்த்து நிற்க வேண்டியதுதான், வரட்டும் செங்கிஸ்கான்!!—என்று வீரம் பேசும் நிலை ஏற்பட்டுவிட்டது.

எல்லாம், ஏன்? நாம், தேர்தலில் ஈடுபடத் துணிந்ததால் மட்டுமல்ல; நாம், தேர்தலில் ஈடுபடத் துணிந்தது கண்டு, தேர்தலில் காங்கிரசை எப்படி எதிர்ப்பது என்று பொதுவாகவே பலரும்கொண்டிருந்த அச்சம் உடைபட்டுப்போய்விட்டது என்பதனால்.

பேழை பலமோ, பெரும் பத்திரிகைகளின் பிரசார பலமோ, அனுபவ பலமோ அற்ற நாமே தேர்தலில் காங்கிரசை எதிர்த்து நிற்க முடியும் என்று துணிந்து தீர்மானித்தானது கண்டு, பலருக்குக் 'குளிர்' நீங்கி விட்டது; இந்தப் 'பயல்களே' தைரியமாகக் கிளம்பும் போது, நாம் மட்டும் காங்கிரசுக்குப் பயப்படுவானேன், பார்ப்போம் நாமும் நம்மால் ஆனதை என்று கிளம்புகிறார்கள்.

தி. மு. க. கேவலம் வகுப்பு வாதம், நாத்திகம், பேதம் பிளவு ஆகிய தீதான கொள்கைகளைப் பேசிக்கொண்டு திரியும் செல்வாக்கற்ற சிறு கும்பல்—இது கிளம்புகிறது, தேர்தலில் காங்கிரசுடன் போட்டியிட! நமக்கு எத்தனை எத்தனை மேதைகள் தந்த தத்துவங்கள் உள்ளன, எவ்வளவு விரிந்த பரந்த, புதுமை செறிந்த புரட்சி நிறைந்த திட்டங்களை நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம், நாம் வேகமாகக் கிளம்பாமலிருக்கலாமா? நாமென்ன, தி. மு. க.வைவிட வீரதீரத்தில் மட்டமா? என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டு ஒவ்வொரு இடதுசாரிக் கட்சியும் கச்சையை வரிந்து கட்டுகின்றன; களத்தில் கையாளவேண்டிய முறைகள் பற்றிக் கூடிப் பேசுகின்றன! தம்பி! ஒரு ஆறுதிங்களுக்கு முன்பிருந்த 'திகைப்பு' போயேவிட்டது. சூடுபிடித்திருக்கிறது, சுறுசுறுப்பு ஏற்பட்டுவிட்டது. கதவில்லா வீடல்ல, தாளிட்டு, காவலும் வைத்திருக்கிறது, என்று தேர்தல் பற்றி காங்கிரஸ் கவலையுடன் எண்ணிட வேண்டிய கட்டம் பிறந்திருக்கிறது; எனக்குக் களிப்பு இதனால் நிச்சயமாகப் பிறக்கிறது; ஏனெனில் நான் இதைத்தான் விரும்பினேன், எதிர்பார்த்தேன், ஏமாறவில்லை. செல்லும் இடமெல்லாம் தி. மு. க. தேர்தலில் ஈடுபடப்போகிறது என்ற செய்தியை, நமது பிரதம பிரசாரகர் போலிருந்துகொண்டு, முதலமைச்சர் காமராஜரே கூறிக் கொண்டு வருகிறார்!

"வீணான தொல்லையை ஏற்படுத்திவிட்டானே, பாவி' என்று காமராஜர் கைபிசைந்துகொள்கிறார்—அவர் பேச்சு ஒவ்வொன்றும் அதைத்தான் காட்டுகிறது.

கைபிசைந்து பயன் இல்லை, கண்சிமிட்டவேண்டும் என்று முறை கூறுகிறார் நிதி அமைச்சர்.

ஆடலும் பாடலும் உண்டாம். நாடகம் நடத்திக் காட்டப்போகிறார்களாம்! சினிமாக் காட்சியும் இருக்கிறதாம்! இப்படிப்பட்ட முறைகளை எல்லாம், தேர்தலுக்குப் பயன்படுத்தப் போகிறார்களாம்! யார்? நாடகமாடுவதை

# பளபளப்பு அங்கே, பக்குவம் இங்கே!

நையாண்டி செய்த நாடாளும் கட்சியினர். ஏன்? இந்த முறைகளிலே. நாம் பயிற்சி பெற்றவர்கள் பொதுமக்கள் இதனால் மயங்கிவிடக்கூடும் என்று எண்ணம்! எனவே இவர்களென்ன, நாங்களும்தான், நாடகம் நடத்தப் போகிறோம் என்று நாடாளும் கட்சி பேசுகிறது.

அவர்களுக்கு, நாடகம் நடத்த நிரம்ப வசதி இருக்கிறது என்பது உனக்கும் எனக்கும் நன்றாகத் தெரியும்! ஐம்பது என்பதை நூறு என்று வீசினால், நாடகமாடயாரும் வருவார்கள் என்றுதான் காங்கிரஸ் தலைவர்கள் எண்ணிக்கொண்டுள்ளனர்; அவர்கள் எண்ணுகிறபடி பல நாடக நடிகர்கள், இணங்கவும் கூடும். ஆடவும் பாடவும் ஆட்களுக்கு என்ன பஞ்சமா?

எடுத்துக் காட்டுக்காகக் கூறுகிறேன்—என் வாக்கு பலித்துவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை—குமாரி கமலாவை, அழைத்து ஐந்தாண்டுத் திட்டப் பிரசாரத் துக்கான நாட்டியம் அண்ணாமலை மன்றத்தில் ஏற்பாடு செய்து, அதற்கு, பட்டம் பெற்ற சுப்புலட்சுமியைப் பக்கப்பாட்டுப் பாடச் செய்தால், 'பிரம்மானந்தமாக' இருக்கிறது என்று, பாக்கார்டிலும், ஓல்ட்ஸ்மோபைலிலும், செவர்லேயிலும் பியாட்டிலும் வருகிற கனவான் கள் பூரித்துக் கூறுமலா இருப்பார்கள்.

அஞ்சு! அஞ்சு! அஞ்சு!<br>
எல்லாம்<br>
அஞ்சு! அஞ்சு! அஞ்சு!

என்ற பாடலைத் துவக்கி, குமாரி கமலா அரங்கத்தில் நின்று, அதற்கான அபிநயம் காட்டி,

பூதம் அஞ்சு<br>
பஞ்ச பூதம் அஞ்சு<br>
பாண்டவர் அஞ்சு<br>
பஞ்சபாண்டவர் அஞ்சு<br>
தந்திரம் அஞ்சு<br>
பஞ்ச தந்திரம் அஞ்சு!<br>
நேரு மந்திரம் அஞ்சு<br>
பஞ்சசீலம் அஞ்சு!

என்று பாடலை, விழியாலும் விரலாலும், இடை நெளி வாலும், உடை வளைவாலும், காலாலும், கழுத்து அசை வாலும், விளக்கிக் காட்டினால்போதாதா? ஐந்தாண்டுத் திட்டத்தின் அதியற்புதச் சாதனைகளை, விளங்கிக்கொள் ளவா மாட்டார்கள்! வீடு சென்றதும் குமாரிகளும், பாலாக்களும் பாய்களும்,

ஐஞ்சு! ஐஞ்சு! ஐஞ்சு!

என்று பாடுவர், பரதம் காட்டுவர். அவர் பதிகளோ,

பாணம் அஞ்சு!<br>
பஞ்ச பாணம் அஞ்சு!<br>
மன்மதன் ஏவும்<br>
பாணம் அஞ்சு

என்று பாடிக் கொஞ்சுவர்!

புரிகிறது! இனிப்புக்கூடச் சுரக்கிறது! ஆனால், இவைகளின் மூலம் இன்னலால் தாக்குண்டு, இல்லாமையால் இடர்பட்டுக் கிடக்கும், மக்களை, மயக்கிடவும் அவர் தம் உள்ளக் குமுறலைமாய்த்திடவுமா முடியும்! நிச்சயம் அந்தப் பலன் கிட்டாது என்பதை, அவர்கள்

ஆட்டமாடி<br>
பாட்டுப்பாடி<br>
அழகான ஜதை காட்டி

பார்த்த பிறகு தெரிந்துகொள்வார்கள்!

ஆனால் ஒன்று, தம்பி நம்மைவிட அவர்கள், பள பளப்பு அதிகம் காட்ட முடியும், நாடகங்களில்.

பேச்சு மேடையே, தெரியுமா, நாமும்தான் ஓயாமல் பேசுகிறோம், ஊரூர் சென்று பேசுகிறோம், ஒரு நாளைக்கு இரண்டு மூன்று கூட்டம்கூடப் பேசுகிறோம், மேடையில் ஏறியதும், நாம் ஆட, நாற்காலி உடனாட, ஒலி பெருக்கித் தானும் ஆட!—என்ற முறையிலே அமைப்பு இருந்திடக் காண்கிறோம். தேர்தல் வருகிறது என்ற உடன் அலங்காரமான மேலிட அமைப்பே ஒன்று இரண்டாயிரம் ரூபாய் செலவிலே புதிதாகக் கண்டு பிடித்துவிட்டார்களே! மரத்தாலான மேடை! இரும்பாலான கால்கள்! பூட்ட ஒன்றரை மணிநேரம் பிடிக்குமாம்! கழற்ற முக்கால் மணிதானும்! மேடையில இருபதுபேர் அமரலாமாம்! கண்டனராம் காங்கிரஸ் மந்திரிமார், கழிபேருவகை கொண்டனராம்.

இனி என்ன குறை! கோவைக்கு ஒன்று, மதுரைக்கு இரண்டு, நெல்லைக்கு ஒன்று, சென்னைக்கு நாலு என்று காங்கிரஸ் கட்சியால் இந்த 'புதிய அமைப்பு' வாங்கிப் பயன்படுத்த முடியும்! பணம் இருக்கிறது, கொள்ளை கொள்ளையாக!

தம்பி! அவர்களின் வேலை துவங்கிவிட்டது. நாம்? அந்தக் கேள்வியை, நாம் ஒருவருக்கொருவர் கேட்டுக் கொண்டே இருந்தால் வேலை ஏதும் நடவாது. எனவே அவரவர்க்குக் கிடைக்கும் வாய்ப்பினைப் பயன்படுத்தி அவரவர்க்கு உள்ள துறையில், அவரவர்க்கு உள்ள 'சக்தியுக்தி'க்கு ஏற்ப வேலை செய்யவேண்டியதுதான்.

ஒன்று நான் கூறுவேன், நீயும் அறிவாய், அவர்கள் எந்தக் காரியத்துக்கும், பணம் கொடுத்து, பசை காட்டி ஆட்களை இழுத்துக்கொண்டு வரவேண்டும். நாமோ, பணமற்றவர்கள், எனவே 'கூலிக்கு மாரடிக்க' ஆட்கள் தேடமாட்டோம், கொடி பிடிப்பதிலிருந்து கூத்து ஆடுவது வரையில் நாமேதான் செய்யப்போகிறோம். திறமையாகச் செய்யப்போகிறோம், ஏனெனில் நம்பிக்கை ஒன்று மட்டுமே தரும் ஆர்வம் நம்மிடம் நிரம்ப இருக்கிறது; நாட்டுக்கு எடுத்துக் காட்டுவதற்கு ஏராளமான காட்சிகள் உள்ளன!

நாடகம் நடத்த நாடாள்வோர் துவக்கப் போகிறார்களாம்! அந்த நன்னாளை நான் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்! ஆடட்டும்!

ஆனால், தம்பி, எங்கே உன்னுடைய நாடகக்குழு, இன்றே, குழுவின் அவசரக் கூட்டம் நடைபெறட்டும்! நாடகம் தயாராகட்டும்! நாட்டு நலிவுபற்றிய விளக்கம் நாடாள வந்தவர்கள் தந்த வாக்குறுதிகள் யாவும் பொய்த்துப் போனது பற்றிய விளக்கம், நம்மவர்படும் துயரம், நாடாள்வோர் அதற்குக் கூறும் சமாதானம் இவை பற்றிய, நாடகங்கள் நால்வர், அறுவர், பதின்மர் கொண்ட குழுக்களால், எளிமையும் இனிமையும்

(13-ம் பக்கம் பார்க்க)

ஆ. லெக்கிஷ்ணக் தொண்டைமான் 6.4.69

# திட்டமிடாத குடும்பம் ஒரு குட்டிச்சுவர்!

குடுப்பதி ரகுநாதன்

சில சமயங்களில் நாவலில் படித்த பக்கங்களையே நம்மை யறியாமல் திருப்புவோம். மனம்கூட அப்படித்தான்! வாழ்ந்ததையே திருப்பிப் பார்க்கும். ஈஸிசேரில் சாய்ந்த வண்ணம் பழைய நினைவுகளில் மூழ்கியிருந்தேன்.

பொன்னம்மா முற்றத்தறையில் எவர்சில்வர் பாத்திரங்களை சுத்தம் செய்து அடுக்கிக் கொண்டிருந்தாள். என் கவனம் அவள்மேல் திரும்பியது.

பொன்னம்மா எங்கள் வீட்டு வேலைக்காரி. அவளுக்கு முப்பத்தி ஐந்து வயது இருக்கும். தளர்ந்த மேனிதான். இருந்தாலும் பருவம் தாண்டிவிடவில்லை! அவள் ஆறு குழந்தைகளுக்குத் தாய்.

பொன்னம்மாவிடம் சந்தேகப் படத்தக்க மாறுதல்கள் இருந்தன. உடல் பளபளத்தது. முகத்திலே ஒரு தனிக் களை.

என் பார்வை பொன்னம்மாவை ஊடுருவுவதை சுமதி கவனித்து விட்டாள் என் முகத்தில் லேசான புன்முறுவல். புருவங்களை கேள்விக் குறியாக்கினேன்.

தலையசைத்து ஒப்புக்கொண்டாள் சுமதி. அவள் பார்வை 'நீங்கள் பொல்லாதவர்!' என்று செல்லமாகக் கோபித்துக் கொண்டது.

தனிமையில் சுமதியிடம், 'பொன்னம்மா மறுபடியும்...'' என்று ஆரம்பித்தேன்.

''ஆமாம்! போன தடவையே உங்கள் கருத்தையெல்லாம் அவளிடம் சொல்லியிருந்தேன்! அவளும் புரிந்துகொண்டாள்.''

''அதுதான் இவ்வளவு சீக்கிரத்தில்...'' என் பேச்சின் குறும்பு அவளுக்குப் புரியாமல் இல்லை!

'நம் கையில் என்ன இருக்கிறது?' அவள் கேள்வியே பரிதாபமாக இருந்தது!

''அதெல்லாம் பாட்டி பேச்சு நீ கூட இப்படி பத்தாம் பசலியாக இருக்கிறாயே?...''

''உங்களுக்கு ஏன் இந்தக் குடும்பக் கட்டுப்பாடு விஷயத்தில் இவ்வளவு அக்கறை? அரசு ஏதாவது தனிச் சலுகை கொடுக்கிறதா?'' என்றாள் கேலியாக.

''குடும்பக் கடமைகளையே புரியாத மக்களோடு வாழும் பெண்தானே நீயும்! உனக்குத் தனி மனிதனின் சமுதாயக் கடமைகளைப் பற்றி என்ன தெரியப் போகிறது?''

'அப்படியானால் இந்தப் பிரச்சாரம்கூட ஒரு சமுதாயக் கடமையா?''

''நிச்சயமாக. திட்டமிட்ட குடும்பத்தில் எவ்வளவு நன்மை யிருக்கிறது தெரியுமா? குடும்பக் கட்டுப்பாட்டை அனுஷ்டிக்கும் ஒருவன், தன் குழந்தைகளுக்குச் செய்ய வேண்டிய குடும்பக் கடமைகளையும் செம்மையாகச் செய்து முடித்து விடுவதோடு, நல்ல பிரஜைகளை உருவாக்கியதால் நாட்டிற்குச் செய்யவேண்டிய சமுதாயக் கடமைகளையும் நிறைவேற்றிய நல்ல குடிமகனாகி விடுகிறான்!''

''பாவம் பொன்னம்மா! ரொம்பக் கஷ்டப்படுகிறாள்!''

''குறைந்த வருமானமுள்ள ஏழைகள் தாங்க முடியாத குடும்பச் சுமையை சுமந்து, தாங்களும் அழிகிறார்கள்! நாட்டையும் கெடுக்கிறார்கள்!''

''பொன்னம்மாவும் இந்தத் தடவை ஜாக்கிரதையாகத்தான் இருந்திருக்கிறாள். அதெல்லாம் எனக்குத் தெரியும். அவள்மேல் குறை சொல்ல முடியாது. நீங்கள் நிறைய படித்தவர்கள். எதற்கும் காரண காரியம் கேட்பீர்கள். எனக்குச் சொல்லத் தெரியாது. ஆனால் நம்மைமீறிய ஒரு சக்தியும் உண்டு!''

''பெண்கள் எப்பொழுதுமே பழைமையில் ஊறியவர்கள்! அவர்களைத் திருத்த ரொம்ப நாளாகும்.''

''சில சமயங்களில் திருத்தப் போகிறவர்களே திருந்தியதுமுண்டு!''

''பார்ப்போம்!''

பொன்னம்மா நான்கு நாட்களாக வேலைக்கு வரவில்லை. சுமதிக்கு ஓயாத வேலை. அவள் கஷ்டத்தை என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது.

இரண்டு நாட்களுக்கு முன்பே கேட்டேன். சுமதி ஏதோ சாக்குப் போக்குச் சொன்னாள். நானும் மேலும் கேட்காமல் விட்டுவிட்டேன்.

பொன்னம்மாவின் கணவன் ஒரு மாதிரி. வெளியில் கிடைக்காத போது வீட்டுக்கு வருவான். வந்தவனுக்கு எதையும் கொடுப்பதுதானே மனைவியின் கடமை! தேவையை முடித்துக்கொண்டு போய்விடுவான் அவன். பிறகு அவனுக்கு எதைப் பற்றிய கவலையும் இல்லை.

பொன்னம்மா பெற்ற செல்வங்கள் ...தங்கக் கட்டிகள்......சொல்லவே வேண்டாம்!

பொன்னம்மா ஒரு நாள் அழுத முகத்தோடு வேலைக்கு வந்திருக்கிறாள். முகமெல்லாம் வீங்கியிருந்தது. சுமதி கேட்டிருக்கிறாள்.

உணர்ச்சி வசப்பட்ட பெண்களின் வாயில் எதுவும் தங்காது! பொன்னம்மாவும் அந்த ரகம்தான்!

பொன்னம்மாவின் மூத்த மகன் ஒரு சினிமா ரசிகன். அதுவும் தமிழ் நாட்டின் முன்னணி நடிகர் ஒருவருக்காகத் தன் இன்னுயிரை வைத்திருப்பவன். அவர் படம் ரிலீஸானால் உயிரைக் கொடுத்தாவது முதல் காட்சியையே பார்த்துவிடுவான். வாழ்க்கையில் அவனுடைய ஒரே இலட்சியம் அதுதான்!

அந்த நடிகருடைய படம் ரிலீஸாவதைத் தெரிந்து அன்று மகனுக்கு

முதல் வகுப்பு டிக்கெட்டுக்குக் காசு தேடி வைப்பது தாயின் கடமை!

எங்கள் வீட்டில் ஒரு விசேஷம். அதற்கு பொன்னம்மாவுக்கு ஒரு நல்ல சேலை எடுத்துக் கொடுத்தோம். அவள் அதை உடுத்துக் கொள்வதில்லை. இந்த மாதிரி சமயங்களில் அந்தப் புதுப் புடவையை அடமானம் வைத்து காசு வாங்கிக் கொடுப்பாள் பொன்னம்மா.

அந்த நடிகருடைய படம் சென்ற வாரம்தான் ரிலீஸாகி யிருந்தது. புடவை அடமானத்திலிருந்தது. இன்னும் அதைத் திருப்பவில்லை.

அதற்குள் அந்த நடிகருடைய மற்றொரு பிரமாண்டமான தயாரிப்பு இந்த வாரம் வெளிவந்துவிட்டது. பொன்னம்மா படாத பாடு பட்டாள். காசே கிடைக்கவில்லையாம்! புருஷனே கழுத்தில் மஞ்சள் கயிறு ஒன்றை மட்டும் விட்டு வைத்திருக்கிறன்—அதையும் விற்க முடியாத காரணத்தால் அதில் ஏதாவது கொஞ்சம் நஞ்சம் தங்கமிருந்தாலாவது விற்றுக் கொடுத்துவிடுவாள். அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

பையன் நையப் புடைத்துவிட்டான் பாவம், பொன்னம்மா! அழுது கொண்டே இந்த விபரங்களை சுமதியிடம் சொன்னளாம்!

'கூரை மேல் நின்றுகொண்டு கொள்ளிக் கட்டையை வீசுபவன் தான் நல்ல மகன்!'—என்று யாரோ சொன்னனும்! அந்தக் கதைதான் பொன்னம்மாவுடையதும்! இந்த சினிமா ரசிகன்தான் அவளுடைய நல்ல பிள்ளை!

அன்றிரவு சுமதியிடம் மறுபடியும் பொன்னம்மாவைப்பற்றிக்கேட்டேன்

"நீங்கள் விரும்பிய படிதான் அவள் ஏதோ செய்துவிட்டாள்!"

சுமதியின் குரலில் லேசான அதிருப்தி.

"என் விருப்பப்படியா?"

"ஆமாம். அவள் ஏதோ மருந்து சாப்பிட்டுவிட்டாள், உடம்பு கெட்டதுதான் மிச்சம். வேறென்றும் பலனில்லை,

"நீ ஏதாவது அப்படி நான் சொன்னதாக நினைத்து...அவளிடம் சொன்னயா?"

'நான் எதற்குச் சொல்கிறேன் பொன்னம்மாவுக்கே விருப்பமில்லையாம்! தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் தவிர்க்க முடியாமல் நிகழ்ந்து விடுவதற்குப் பெண்கள் என்ன செய்ய முடியும் என்று கேட்கிருள்! அவளே எனக்குக்கூட தெரியாமல் ஒரு கிழவியின் பேச்சைக் கேட்டு ஏதோ நாட்டு மருந்தைச் சாப்பிட்டு விட்டாள்,"

"ஆபத்து ஒன்றுமில்லையே?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை. வெறும் அலட்டல்தான்! இன்னும் இரண்டு நாளில் வேலைக்கு வந்து விடுவாள். நான்தான் கொஞ்சம் ஓய்வு எடுத்துக்கொண்டு வரச் சொன்னேன்!"

"சுமதி! நான் சொன்னதெல்லாம் குடும்பக் கட்டுப்பாடு, திட்டமிட்ட குடும்பம் ஆகியவைகளைப் பற்றி, நீ இப்பொழுது பொன்னம்மாவின் செயல் பற்றிச் சொன்னயே அது [illegible] முற்றிலும் வேறானது! [illegible] சிதைவு முயற்சி! இரண்டு [illegible] மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம் உண்டு. தமிழ் நாட்டு [illegible] பத்திரிகைகளுக்கே இந்த வேறுபாடு தெரிவதில்லை. செய்திகளை முரண்பாடாகப் போட்டு மக்களைக் குழப்புகிருர்கள்! நீ கூட அவைகளைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை! அதுதான் என்மேல் குறைபட்டுக் கொள்கிருய்!"



"நமக்கு மூன்று செல்வங்கள் பிறந்த பிறகு வேண்டுமானல் உங்கள் கருத்துக்களைப் பற்றி யோசிப்போம்!"

"அடடே! நீ கூட ஒரு திட்டம் வைத்திருப்பாய் போலிருக்கிறதே! கௌரி சங்கருக்கு தம்பி, தங்கை ஏதாவது..."

'பேசாமலிருக்க மாட்டீர்கள்?"

பொன்னம்மாவை பிரசவத்திற்காக மருந்துவ மனையில் சுமதி சேர்த்துவிட்டாள். பொன்னம்மாவின் உடல் ரொம்ப பலவீனமாக இருந்தது

சுமதி கணக்குப் பார்க்காமல் இந்த விஷயத்தில் அவளுக்கு உதவி செய்தாள். எனக்கே வியப்புத்தான்! சுமதி எப்பொழுதுமே ரொம்ப சிக்கனம் அதனால் நான் கூட சில அவசியமற்ற செலவுகளை அவளுக்குத் தெரியாமல் மறைத்து விடுவேன்.

பொன்னம்மாவுக்கு இன்னும் இரண்டொரு நாட்களில் குழந்தை பிறந்துவிடுமாம்!

பொன்னம்மாவின் ஏழாவது குழந்தையின் ஜனனத்தை ஆவலோடு எதிர்பார்க்கும் ஒரே ஜீவன் சுமதிதான்! பொன்னம்மாவுக்கு எதிலும் இலயிப்பு இல்லை.

சுமதிக்கு இந்த ஒரு வாரமாக மாலை நேரத்தில் மருத்துவ மனைக்குப் போய் வருவது ஒரு வேலையாகப்போய்விட்டது!

அன்று நான் ஆபிஸிலிருந்து வீடு திரும்பிவிட்டேன். சுமதி இன்னும் வீடு திரும்பவில்லை, வீடு வெறிச் சென்றிருந்தது.

சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டேன். பொன்னம்மாவை நினைத்துக் கொண்டேன்.

(15–ம் பக்கம் பார்க்க)

# காமராசர்களின் கவனம்

அன்புள்ள நண்பா!

உலகத்தில் எத்தனை எத்தனையோ அதிசயங்கள் நடைபெற்றுக்கொண்டுவருவதனை, அவ்வப்போது ஏடுகள், இதழ்கள் மூலம் புரிந்துகொள்ளமுடியும். நிரந்தரமான அதிசயங்கள் என்று பாடநூல்களில் படித்தவைகளில் பைசா நகரத்து சாய்ந்த கோபுரமும், எகிப்தின் பிரமிடுவும் நெஞ்சிலே நீங்கா இடம் பற்றி இருப்பதைப்போல், நிகழ்ந்து விடுகிற உலக அதிசயங்களில் ஏதோ ஒன்றிரண்டு மட்டுமே நெடிய நினைவுக்குரியதாய் நிலைபெறுவது இயற்கையாகும்.

இதைப்போலவே நண்பா, மனித இதயத்திலே கருப்பெறுகின்ற பலகோடிக்கணக்கான எண்ணங்கள் அனைத்தும், என்றென்றும் நின்று நிலைபெறக்கூடியதாகவும் இருப்பதில்லை. நீர்க்குமிழிபோல எண்ணங்கள் எழுந்து, உடனே அழிந்துபோவதும் உண்டு; கல்லெழுத்து ஒத்ததாய் காலத்துக்கும் நினைவுறுத்திக் கொண்டிருப்பதும் உண்டு.

ஈன்றெடுக்கப் பெற்று — பிறந்தவுடனேயே இறந்தொழிந்துபோய் விடுகின்ற எண்ணங்களிலேகூட நல்ல எண்ணங்களும் — செயலுருவம் பெறவேண்டிய எண்ணங்களும் இருக்கக்கூடும். நிலைபெற்று நிற்கின்றவற்றுளே 'யானைக்கபடு' போன்று அழிவுச்சக்திகளைத் தாங்கிக்கொண்டிருப்பவைகளும் இருக்கலாம். அந்த அழிவுச்சக்திகள், காலகாலத்துக்கும் நின்று "காமராசர்"களாகி காலத்தை, கவலைக்குள் மூழ்கச்செய்வனவாகவும் கூட ஆகக்கூடும். அந்தக் "காமராசர்"களேகூட சிலபலவேளைகளிலே "உலக அதிசயங்க"ளாகி, சிரிப்புக்கும், சில பலவேளைகளிலே சிந்தனைக்கும் ஆளாகி விடக்கூடிய சந்தர்ப்பங்கள் அரசியலிலே சாதாரண சம்பவங்கள். இவை சாதாரண சந்தர்ப்பங்கள் என்பதனாலேயே ஒதுக்கித்தள்ளிவிட்டுப் போய்விடவும் முடியவில்லை.

காலஞ்சென்ற நகைச்சுவை வேந்தர் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், தாம் கலந்துகொள்கின்ற பொது நிகழ்ச்சிகளில் சிரிக்கச் சிரிக்கப் பேசுவார். மற்றவர்களைச் சிரிக்கச் செய்வது தம் கடமை—தலையாய கடமை! என்று கருதுவார். காரணம், மனிதன் தான் வாய்விட்டுச் சிரிக்கும்போது, இதயம் சுருங்கிவிரிகிறது —அவ்வாறு சுருங்கி விரிவதனால் நீடித்த ஆயுளுககுரியவனாக மனிதனை ஆக்குகிறது என்பார்!

சிரிப்பு என்பது ஒரு சஞ்சீவி மருந்து என்ற கருத்தில் நாட்டு மக்களையே தான் ஒரு இயக்கமாகவிருந்து, சிரிக்கச் செய்துகொண்டு கலைவாணர் வாழ்ந்து வந்திருக்கும்போது—சிரிக்கத் தக்க சில செய்திகளை காமராசர்கள் உண்டாக்கித் தரும்போது, கிடைக்கின்ற வாய்ப்புக்களை நாம் இழந்துவிடக் கூடாதல்லவா!

பேரறிஞர் அண்ணா அவர்கள் தாம் முதலமைச்சர் பதவிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் முன்பு வரையில், 'திராவிட நாடு' இதழ் மூலமும், 'காஞ்சி' இதழ் மூலமும் நாட்டுக்கறிவித்து வந்துள்ள கருத்துக்களை மீண்டும் நண்பர்களது பார்வைக்குப் படைக்கின்ற முடிவினை 'காஞ்சி' எடுத்துக்கொண்ட பின், கடந்த 4 நான்கு கிழமைகளாகப் படித்தும்—படித்ததனை மீண்டும் நினைத்தும் வருகிறாய்!

நண்பா! 23-2-69 இதழில் மறுபதிப்பாக வந்துள்ள மாமியார் வீட்டில்! என்ற மடலை படித்தாயல்லவா! மாமியார் வீட்டிலே மதிப்புப் பெற நினைத்த அந்த மாப்பிள்ளை நள்ளிரவு நேரத்திலே கலவடையில் தலையைவிட்டு, அது கழுத்திலே மாட்டிக்கொண்டது என்கிறவரையிலே படித்துப் பார்க்கிறபோது—ஒரு முறையல்ல—பலமுறை சிரித்திருப்பாய்! நீமட்டுமல்ல— நண்பர்களைக் கூட்டி வைத்துச் சிரித்திருப்பாய்! நீ சிரிக்க நண்பர்கள் சிரிக்க, அதனைப் பார்க்கும் மற்றோர் சிரிக்க —இப்படியே

தட்டானைத் தொட்டானை
தொட்டானைத் தொட்டானை
தொட்டானைத் தொட்டானும்

என்பதுபோல சிரிப்பு பரவிவிட்டிருக்கும்!

ஆனால், மாமியார் வீட்டைக் கடந்து உதவாக் கரைகளை அமைச்சராகக் கொண்ட அமைச்சரவையின் தலைவராம் முதலமைச்சர் காமராசர் பற்றிய விளக்கத்துக்கு வந்ததும், சிரித்த சிரிப்பு எப்படி சிந்தனை வயப்பட்டு மாறிவிடுகிறதோ அதுபோலவே சிரிக்க வைத்துச்சிந்திக்க வைத்த பேரறிஞர் தம் எழுத்துப் போலவே எல்லோராலும் படைத்துவிட முடிகிறதா? அவரைப் போன்றே பேசி வெற்றி பெற்றுவிடவும் முடியுமா?

சிரிக்க மட்டும் வைக்க சிலரால் முடிகிறது!

சிந்திக்க மட்டும் வைக்க சிலரால் முடிகிறது!

சிரிக்க வைத்துச் சிந்திக்க வைக்க சிலரால் மட்டும் முடிகிறது!

இதிலே சிரிக்க மட்டுமே வைக்கக்கூடியவர்கள் பட்டிய

லீலே, நீ இப்போது காமராசரை வைத்துக் கொள்ள லாம் என்பதற்கான அனுமதியை நான் தந்து நீ பெற்றுக்கொள்ள வேண்டியதில்லை! காமராசரே இந்த நாட்டு மக்களுக்காக உரிமை வழங்கி இருக்கிறார், தம் பேச்சுக்கள் மூலம்!

அதற்கு முன்னதாக நண்பா, காமராசர் எத்தகைய அரசியல் வாதியாக இருந்தார்—இருக்கிறார் என்பதைக் கொஞ்சம் புரிந்துகொள்ள வேண்டாமா?

படைக்கப்படுகிற விருந்திலே என்னென்ன வகைகள் என்பதற்குப் பட்டியல், முன்னதாகவே தந்து விடும் பழக்கம் அநேகமாக தமிழ்நாட்டில் இல்லை, ஆனால்—

> "ஆடியபாதம், அமைச்சருக்களித்த விருந்து, இப்படி இப்படி இருந்தது! இன்னின்ன வகைகள் பறிமாறப்பட்டன"

என்றும்,

> "கலியாணராமன் வீட்டுக் கல்யாணத்துக்குக் கலெக்டர் வருகை தந்திருந்தபோது படைக்கப்பட்டதுதான் விருந்து! அடடா! எத்தனைவகைக் கறி! எத்தனை வகையான இனிப்புக்கள்! ரசம் ஒன்றேபோதும்; அந்த விருந்துக்குப் பெருமைகூட்ட, அன்னாசிப் பழமாம்! சல்லி சல்லியாக வெட்டி அதிலே போட்டிருந்தார்கள்! அந்த 'மணம்' இருக்கிறதே, அதனை இப்போது நினைத்தாலும் நாக்கில் எச்சில் ஊற்றுப் பெருக்கெடுக்கிறது"

என்பதுபோலவும்,

> "இலை எட்டு ரூபாய் பெறுமய்யா! பதினைந்துவகைக் கறிகள்! எட்டுவகை இனிப்புக்கள்! ஊறுகாய் மட்டும் ஆறு ரகம்! இனிப்பும் புளிப்பும் கலந்தது மட்டும் மூன்று ரகம்! மசாலா சேர்த்து செய்யப்பட்ட உருளைக் கிழங்கு பொடிமாஸ் தின்னத்தின்ன திகட்டவில்லை! சாம்பார்மேலே அரை அங்குல கனத்துக்கு நெய் மட்டும் மிதந்துகொண்டிருந்தது! தயிர் ஊற்றினார்கள் பார், கையை வெந்நீர் விட்டுத்தான் கழுவ வேண்டி வந்தது',

என்று ஏகாம்பரம் வீட்டு சீமந்தக் கல்யாணவைபோகம் பற்றியும், ஒரு விருந்துக்கு முன்னால் விமரிசனங்கள் உண்டாவது என்பது இன்னமும் மாறிவிடாத ஒரு மரபுதான்! நம் நாட்டில்!

காலம், எத்தனையோ மாற்றங்களைக் கடந்து வந்திருக்கிறது! அற்புதங்களையும் நிகழ்த்திக் கொண்டிருக்கிறது! ஆனால் அன்று முதல் இன்று வரையில்

> காமராசரை மட்டும் அப்படியே விட்டுவைத்திருக்கிறது.

என்கிறபோதுதான் இந்தக் காலதேவனின் கைங்கர்யம் பற்றிக் கணித்துணர முடியாமற்போய் விடுகிறது!

காமராசர் அரசியலில் புகுந்து ஆலவட்டம் ஆடத் தொடங்கியது முதல், ஏடுகள், இதழ்கள் இவைகளின் செய்தியாகவும் ஆனநாள் முதல், பலதடவை பேரறிஞரின் பேனாவுக்கு வேலை தந்திருக்கிறார். அவற்றையெல்லாம் இதுவரையில் படித்தும் சுவைத்துமிருக்கிறாய். இனியும் சுவைக்க இருக்கிறாய்! ஆனால் நண்பா, 23—3—69 இதழில் சுவைத்தாயல்லவா உதவாக்கரைகளின் முதலமைச்சர் என்று! அந்த நிலை இன்று வரையிலே மாறிவிட்டிருக்கிறதா என்று ஒரு கணம் நினைத்துப்பார்!

> உதவாக்கரைகளின் முதலமைச்சர்.

என்பதற்கு இன்னுமொருமுறை விளக்கம் தேவையில்லை! இப்போது அவர் முதலமைச்சரோ, அமைச்சரோகூட அல்ல. எத்தனையோ "அரசியல் லீலை"களை வைத்து அப்படியொரு நாடகமாடி இருக்கிறார் அவர்! மக்களை ஏய்க்க!! டில்லியிடம் மதிப்புப்பெற.

மதிப்புப் பெற்றாரா? இல்லையா? மற்றவர்கள் பெற்றார்களா இல்லையா என்பதல்ல இப்போதைய பிரச்னை! அன்றைய நாடகக் காட்சிகள் இன்று ஏதேனும் மாற்றம் கொண்டிருக்கிறதா? என்பதற்கு ஒரு கண்ணோட்டம்தான் இப்போது!

நண்பா! ஒரு திங்களுக்கு முன்பு, மதுரையிலே ஒரு சம்பவம் நடைபெற்றது!

மதுரை திருமாறன் என்பவர்மீது ஒரு வழக்கு, வழக்குக்கான காரணம் பற்றி அரசே அறிவித்துவிட்டிருக்கிறது! அதுவும் சட்டமன்றத்திலேயே அறிவித்திருக்கிறது.

> வழக்கு—போலீஸ் நிருவாகத்தைப் பற்றியது.
> சம்பவம்—சட்டம் ஒழுங்கைப் பற்றியது.

மதுரை திருமாறன் என்பவர்மீது போலீசார் பல சம்மன்கள் சார்பு செய்திருந்தும், சட்டம்—ஒழுங்கைக் காக்கும் பொறுப்பிலிருக்கும் ஒரு குடிமகன்—காங்கிரசுக்காரர்கள் கூறிக்கொள்ளுகிறபடி ஒரு இந்தியக்குடிமகன்—என்கிற முறையிலாவது, நீதி மன்றம் சென்று—தன் வழக்கை எடுத்துச்சொல்லி இருக்கவேண்டும்! அதுதான் அறிவுடையோர் செய்கின்ற செயல்!

பலதடவைகளிலும் சம்மன்கள் புறக்கணிக்கப்பட்ட பின்பு, அவர் வீட்டுக் கதவிலும் ஒட்டப்பட்டிருக்கிறது. போலீசார் சட்டப்படி எடுக்கும் கடைசி நடவடிக்கை அது. அதற்கும் அவர் நீதிமன்றத்துக்கு வராமற்போனால்—கைது செய்து கொண்டுபோய், நீதிபதியின் முன்னால் நிறுத்தவேண்டும் போலீசார்.

மதுரை போலீசார் இதனைத்தான் செய்திருக்கிறார்கள்! நெடுமாறன் என்பவர் மீதுள்ள வழக்கின் காரணமாக—அவர் சம்மன்களை வாங்கமறுத்துவிட்டதன் காரணமாக—அவர் போலீசுக்காரர்களால் கைதுசெய்யப்பட்டு, போலீஸ் வண்டியில் ஏற்றப்பட்டு, அழைத்துச் செல்லப்படுகிறார்! அதாவது நாடாண்டக் கட்சியின் ஒரு உறுப்பினர். ஆட்சி என்றால் என்ன? சட்டம்—என்றால் யாது? ஆட்சி நடாத்துவோர், சட்டம்—ஒழுங்கை நிலைநாட்ட என்னென்ன செய்வர்? செய்ய முடியும்? என்பதையெல்லாம் அனுபவ பூர்வமாக அறிந்து கொண்டிருக்கும் ஒரு கட்சியின் உறுப்பினர் அழைத்துச் செல்லப்படுகிறார், போலீசுக்காரர்களால், நீதிமன்றத்துக்கு.

எவ்வளவு பெரிய கொடுமை இது! ஒருவர் குற்றவாளியா? அல்லவா? என்பதை நீதி மன்றம்தான் முடிவெடுக்க வேண்டும்.

> சண்முகத்தின் முகத்தைப் பார்த்தால் சந்தேகமாக விருக்கிறது!
> சந்து பொந்துகளிலே திரிகிறான்! இருட்டிலே நடமாடுகிறான்; திருட்டுவிழி விழிக்கிறான்!

இவை போதாதா, ஒரு போலீசுக்காரருக்கு! அவன் கழுத்தைப் பிடித்து இழுத்துக்கொண்டுபோய், செம்மையாக 'நாலு' போடு போட்டு, உண்மையை வரவழைத்துவிட மாட்டாரா?

> சந்தேகப்படும்படியான முகம்.
> சந்து-பொந்துகளிலே சுற்றல்.

இருட்டில் நடமாட்டம்—திருட்டு விழி!
அதோடு—

கையிலே சாவிக்கொத்து; கன்னக்கோல்

இவையும் இருந்தால் போலீசுக்காரர், அவனை சும்மா விட்டு விட்டுப் போய்விடுவாரா? 'நாலு' அல்ல— நாற்பதுகூட அல்லவா "போட்டு" இழுத்துப் போவார்!

சண்முகம் குற்றவாளியாக இருக்கலாம் என்பது, அவனைப் பார்த்த போலீசுக்காரரின் சந்தேகம்! அந்த சந்தேகத்துக்கு அவன் முடிவு காண வேண்டிய இடம் நீதிமன்றம்!

சண்முகம் ஒரு நாடக நடிகன். பட்டப் பகலில் நாலு பேருக்கு முன்னால் போனால் அவனது ரசிகப் பெருமக்கள் அவனை சும்மா விட்டுவிட மாட்டார்கள்! அன்புப் பெருக்கைக் காட்டி உயிருக்கேகூட 'உலை' வைத்து விடுவார்கள். இருட்டிலே நடமாட வேண்டி வந்து விடுகிறது யாராவது வந்து அடையாளம் கண்டு கொள்வார்களோ — அன்புத் தொல்லை ஆரம்பமாகி விடுமோ? என்று நினைக்கிறபோதே முகம் எத்தனை எத்தனைக் காட்சிகளைக் காட்டத் தொடங்கிவிடும்? அன்று பிரதான ஒத்திகை. செய்ம்முறையோடு கூடிய நடிப்பு. சாவிக் கொத்தும், கன்னக்கோலும் அவன் நடிக்கும் காட்சியிலே வருகிறது. அவரவர்களுக்குத் தேவையான உடை, அணிகள், துணைப் பொருட்களை அவரவர்களே கொண்டு வரவேண்டும் என்பது இயக்குநரின் கட்டளை அல்ல—'வேண்டுகோள்' அதனால் சண்முகம் கொண்டு போகிருன்.

போலீசுக்காரர் அதனை எடுத்த எடுப்பிலேயே நம்புவாரா? நம்பும்படியாக ஏதாவது எடுத்துரைக்கப் படவேண்டாமா?

பிடித்துக்கொண்டு போய்விடத்தானே நினைப்பார்.

மதுரை திருமாறன்மீது, போலீஸ், குற்றமிழைத் திருப்பதாகக் கருதியது.

நீதி மன்றத்துக்குப் பலமுறை அழைத்தது! இறுதியாகப் 'பிடித்துக்கொண்டு'போகவேண்டிய நிர்ப்பந்தமும் வந்தது!

நாடாண்ட கட்சி, இன்னும் ஆளவேண்டும் என்பதற்காகத் துடியாய்த் துடித்துக்கொண்டிருக்கும்கட்சி, எத்தனை எடுத்துக் காட்டாக நடந்துகொள்ள வேண்டும்?

சரியான ஒரு எதிர்க்கட்சி இல்லை என்று கிடைத்த நேரத்திலேயெல்லாம் எடுத்துப் பேசிவந்த ஒரு கட்சி —ஒரு எதிர்க்கட்சி எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதற்குக்கிடைத்திருக்கிற வாய்ப்பை, தக்கபடி பயன் படுத்திக் காட்டி பாடம் புகட்டவேண்டிய ஒரு கட்சி, என்ன செய்யவேண்டும்?

'வாரண்டு' கொண்டுவந்து பிடித்துக்கொண்டு போகிறவனை, கூட்டமாகக் கூடி தாக்கி கல்லெறிந்து, கலாம் மூட்டி குழப்பம் விளைவிப்பதா?

போலீசாரைத் தாக்கிக் காயமுண்டாக்குவது,

போலீஸ் அதிகாரிகளை இழிவுபடுத்துவது,

போலீஸ் நிருவாகத்தையே பழிப்பது,

இதற்காக அரசமீது பழியுரைப்பது — பழியுண்டாக்குவது—

என்கிற போக்கிலே ஒரு அனைத்திந்திய அந்தஸ்துடைய கட்சி ஈடுபடுகிறதென்றால்—அந்தக் கட்சிக்கு இருபதாண்டுக் காலம் இந்த நாட்டை ஆண்டுவந்த அனுபவம் வேறு இருக்கிறதென்றால், அது நாடாண்ட காலத்தில் இதுபோன்ற முறைகளைத்தான் கையாண்டு வந்ததா? என்று சராசரி அறிவு படைத்த ஆறுமுகத்துக்கூட ஐயம் ஏற்படுமே!

நண்பா! மதுரை திருமாறன் என்பவரைக் கைது செய்து அழைத்துச் செல்கையில், காங்கிரசுக் கட்சியின் பேரால் ஒரு கூட்டம் போலீஸ்வேனைத் தாக்கி கலாம் விளைத்தது. விளைவு தடியடி அளவுக்குச் சென்றது.

காமராசருக்கும், அவரால் மகுடம் சூட்டப்பெற்ற உதவாக்கரைகளுக்கும் மீண்டும் மாமியார் வீட்டிலே மதிப்புப் பெறவேண்டிய நிலைமை ஏற்பட்டுக்கொண்டேயிருக்கிறது என்பதை நிரூபிப்பதைப்போல,

போராட்டம்!

ஊர்வலம்!!

மாநாடு!!!

போன்ற எதையாவது செய்து கொண்டே இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுக்கொண்டே வந்துவிடுகிறது. இந்த நிர்ப்பந்தங்களுக்கு மதுரை திருமாறன் போன்றோர் பலியாக வேண்டிய சந்தர்ப்பங்களைத் தடுத்து நிறுத்த முடிவதில்லை.

எதையாவது செய்யவேண்டும்! அதற்காக ஒரு

8-ம பக்கத் தொடர்ச்சி

கொண்ட முறையில், முச்சந்திகளில், நடத்திக் காட்டப் பட வேண்டுமே! நாமென்ன, குமாரி கமலா, சமூக சேவகி சாருபாலா, சங்கீத கலாநிதி சாம்பமூர்த்தி என்போருக்குச் 'சன்மானம்' கொடுத்து 'சபை'யை ரம்மியமானதாக்கிக் காட்டவா முடியும்! நமக்கு நாமே! ஆனால், அந்த நாம் என்பதிலே உள்ள திருவும் திறமும் சாமான்யமானதல்ல! அதை மறவாதே!

உன் குறும்புப் பார்வை எனக்குப் புரிகிறது தம்பி, புரிகிறது! அண்ணா! நாடகம் ஆடு என்று யோசனை கூறிவிட்டால்போதுமா? நாடகம் வேண்டுமே, எங்கே நாடகம்? என்றுதானே உன் பார்வை பேசுகிறது. பொல்லாதவனல்லவா நீ! சமயம் பார்த்து, என்னை வேலைவாங்கி வாங்கிப் பழக்கபட்டுப்போய்விட்டாய்! சரி! நாடகமும் தருகிறேன்! 'கூடு'மட்டும்—எழில் உருவம் அமைத்துக்கொள்ள உனக்கா தெரியாது—நாடகம் இது முதலாவது! இனித் தொடர்ந்து பல நாடகமும் தருகிறேன்; உன் குழுவினைக் குதூகலமாக பணியாற்றச் சொல்லு.

இந்த நாடகத்தின் பெயர் "பெரியமனுஷா, அப்படித்தான்!" என்பதாகும்.

அடுத்த 'கிழமை' நாடகம்! அது வரை உன் ஆவலைச் சிறிது அடக்கிக்கொண்டிருக்கத்தான் வேண்டும், இங்கு அடிகள் இடம் இல்லை என்று கூறிவிட்டார்.

அண்ணன்,



(22—7—56 திராவிட நாடு இதழில்)

ஊர்வலம்!! எதையாவது பேசவேண்டும்! அதற்காக ஒரு கூட்டம். அதிலே தி.மு.க.வைச் சாடவேண்டும்!!

இப்படி ஆகிவிடுகின்றன காட்சிகள்! எதையாவது பேசவேண்டும்! என்கிறபோதுதான் பேசப்புகுந்த விஷயம், மற்றவருக்குச் சிரிப்பை மூட்டிவிடுகிறது! சிரிப்பை மட்டுமே ஊட்டுகிறது! சிந்திக்க வைக்கவில்லை!

காமராசரது பேச்சு, கலைவாணரது நகைச்சுவையைப்போல சிரிக்க வைத்துச் சிந்திக்கச் செய்யவில்லை.

காமராசரது பேச்சு, எகிப்தின் பிரமிடுபோல என்றும் நினைவுக்குரியதாகவிருக்கவில்லை.

காமராசரது பேச்சு, "சிரிப்புக்கு" என்று மட்டுமே மகுடமிட்டு வெளியிடக் கூடியதாக விருக்கிறது.

காமராசரதுபேச்சு, 'யானைக்கபடு' போல அழிவுச் சக்திகளுக்கும், நாசவேலைகளுக்கும் ஊக்கமூட்டுவதாய் மட்டுமே இருக்கிறது.

காமராசரை, ஜனநாயக சோஷலிசச் சிந்தாந்தத்தின் பிதா என்றுகூட சிலர் வருணிக்க முன்வந்து விடுகின்றனர்.

ஜனநாயகம் என்பதன் பொருளை இன்னமும் துல்லியமான—தெளிந்த விளக்கமாக யாரும் எடுத்துக் காட்டிவிடவில்லை.

யானையைப் பார்த்து, தூண்போன்றது — யானை என்பாரும்,

முறம் போன்றது—யானை என்பாரும்,

சுவர் போன்றது—யானை என்பாரும், இன்னும் வெரெவருக்கு எப்படி எப்படி புலனாகிறதோ, அப்படி அப்படி யானை என்று வருணிப்பதனைபபோல்தான்,

ஜனநாயகம் என்ற சித்தாந்தத்துக்கு இன்னமும் உலகப் பேறிஞர்கள் தத்துவவிளக்கம் தந்துகொண்டிருக்கிறார்கள்.

இதுபோலவேதான், சோஷலிசம் என்ற சித்தாந்தத்துக்கும் அவரவர்கள் தத்தம் நிலைபிலிருந்து விளக்கமளித்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஜனநாயகத்தையும், சோஷலிசத்தையும் ஒன்றாய்க் கூட்டி, ஜனநாயக—சோஷலிசம் என்று மகுடம் சூட்டி விட்டதனாலேயே ஜனநாயக சோஷலிசப் பிதாவாகி இருப்பவர்-செய்து காட்டி இருக்கவேண்டியதென்ன?

ஜனநாயகமும் – சோஷலிசமும் ஒன்றோடொன்று இணைய முடியுமா? என்பது பற்றிக்கூட இன்னமும் பேறிவாளர்கள் சர்ச்சை நடாத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் காமராசரது இந்த ஜனநாயக சோஷலிசம் செய்து கொண்டிருப்பது யாது?

1. குற்றவாளி என்று போலீஸ் கருதுகிற ஒருவரை கைது செய்யக்கூடாது.
2. கைது செய்தால்—கலாம் விளைவித்து கல்லெறி நடத்தி, கைதியை மீட்டுச் செல்ல முனைய வேண்டும்.
3. சட்டம் — ஒழுங்கைக் குலைப்போர்மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது.
4. சந்தர்ப்பச் சூழ்நிலை, பொதுநிலை, நாட்டு நிலை, குற்ற அந்தஸ்து, அரசியல் சூழல் முதலான காரணங்களால் போலீஸ், ஒனறில் சற்றே ஒதுங்கி இருந்தால் 'வளையணிந்த போலீஸ்' 'சேலை கட்டிய அதிகாரி' 'துடைப்பம் ஏந்திய காவல்' என்றெல்லாம் வருணித்தல்.
5. செயல்பட்டால் ஐயோ! அம்மா! அடிக்கிறானே என்ற அவலக் குரல் எழுப்புதல்.

இதனையும், இதுபோன்றவைகளை யும் தானே செய்துகொண்டிருக்கிறது காங்கிரசும், அதன் தலைவர் காமராசரும்!

மதுரை திருமாறன் விவகாரத்தை யொட்டி மார்ச் திங்கள் 30ம் நாள் மதுரையில் ஒரு களம் அமைக்கப் பட்டது!

அமைக்கப்பட்டதன் காரணம் – 'போலீஸ் அடக்கு முறையை எதிர்த்து' என்று.

'போலீஸ் அடக்கு முறை' என்பது, மதுரை திருமாறனை போலீஸ் வேனிலிருந்து தப்புவிக்க முயன்றவர்கள்மீது நடத்திய தடியடி!

இதனைக் கண்டித்துதான் காமராசரது தலைமையிலே களம்! மதுரையில்!!

அமைக்கப்பட்ட களத்திலே கர்மவீரர் பேசுகிறார்!

"யாரும், எந்தக் கட்சிக்காரராக விருந்தாலும் சட்டம் ஒழுங்கு குலையத்தக்க விதத்தில் நடந்துகொள்ளக்கூடாது. சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கும் விஷயத்தில் எந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவராக விருந்தாலும் அரசோடும் போலீசோடும் ஒத்துழைக்கவேண்டும். அரசியல் கட்சிகளே, தன் கட்சிப்பயன் கருதி சட்டம்—ஒழுங்கு குலையத்தக்க விதத்தில் நடந்துகொள்ளக் கூடாது. அரசினை நடத்திச்செல்லுவோர் வேறு —அரசின் அதிகாரிகள் வேறு. குறைகூறும் போது அரசு அதிகாரிகளைக் குறைகூறக் கூடாது."

திகைக்காதே நண்பா! காமராசர் அந்தக் களத்திலே, சர்ச்சைக்குரிய மதுரையம்பதியிலே நீதிக்காக சிலம்பொடித்த நீதிமன்றத்திலே நின்று இதுபோல் அல்லவா பேசி இருக்கவேண்டும்.

"ஒருவர் குற்றவாளியா? அல்லவா என பதைத் தீர்மானிக்கும் பொறுப்பினை நீதிமன்றத்திடம் விட்டு, அதன் பணிகளுக்கு இடையூறு விளைவிக்கக்கூடாது—காங்கிரசுக்காரர்கள்"

என்று காங்கிரசுக்காரர்களுக்கல்லவா காமராசர் புத்திமதி சொல்லி இருக்கவேண்டும்! அது அல்லவா அவர் ஒரு ஜனநாயகவாதி என்பதற்கு எடுத்துக் காட்டாகவிருக்கும். ஒரு கட்சியை வழி நடத்திச் செல்பவர் காட்டுகிற பொறுப்புணர்ச்சி, அதுவாகத் தானே இருக்க முடியும்!

'நமது நாட்டிலே ஜனநாயக வரம்பு நன்றாக வளரவேண்டும் என்று ஆசைப்படுகிறவர்கள் காங்கிரசுக்காரர்கள். ஜனநாயக நாட்டில் வன்முறை, அராஜகம் போன்றவை நடக்கக்கூடாது"

"தி. மு. க. வினர் மதுரையில் மட்டும் காங்கிரசுக்காரர்களைத் தாக்கவில்லை-தமிழ்நாடு முழுவதும் வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்கள்!"

"கலவரங்களும், காலித்தனங்களும், அராஜகங்களும் நடக்குமிடங்களில் போலீஸ்காரர்கள் வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்!"

"எப்படியாவது பொய் வழக்குகள் போட்டு காங்கிரசுக்காரர்களை அடக்கிவிடலாம்; காங்கிரசை அழித்துவிடலாம் என்று நினைத்தால் அது நடக்காது—முடியாது"

மதுரைக் களத்திலே நின்று காமராசர், காரசாரமாகக் கர்ஜித்திருப்பதுதான் நண்பா மேலே காட்டியிருப்பது!

காமராசர் மாமியார் வீட்டிலே மதிப்புப்பெற மட்டும் இப்படிப் பேசியதாகத் தெரியவில்லை. தன்னைப் பெற்றெடுத்து வளர்த்துக்கொண்டு வருவோரிடமே மதிப்புப்பெறவேண்டிய நிலையிலிருப்பதனையும் விளக்கிக் காட்டும் பேச்சாக இது இருக்கிறது.

நாலைந்து சபாஷ்!'களைப் பெறவோ, ஐந்தாறு கைதட்டல்களைப் பெறவோ மட்டுமே இப்படிப்பேசி இருந்தால் நமக்கொன்றும் நட்டமில்லை.

சிரிப்பதற்காகத்தானே பேசியிருக்கிறார்! பேசிப் போகட்டும் என்று விட்டுவிடலாம்!

ஏப்ரல் இறுதியிலே நகராட்சித் தேர்தல் வரவிருக்கிறது. மதுரையிலேகளம் அமைத்துப் பேசுகிறார் இப்படி!

எந்த மதுரையம்பதியிலே, காங்கிரசுக்காரர்கள் கட்டவிழ்ந்த நெல்லி மூட்டை.யென கலாம் விளைப்பதிலே ஈடுபாடு கொண்டார்களோ, அங்கே நின்று சிம்மக் கர்ஜனை எழுப்புகிறார்—

இது நடக்காது—முடியாது

என்று! அதாவது கலவரங்கள் செய்வதனை காங்கிரசுக்காரர்களே நிறுத்தாதீர்கள்! தொடருங்கள்! என்று பொருள் தரும்படியாகப் பேசுகிறார்!

சிரிப்பவர்கள் சிரிக்கட்டும்! சிந்திப்பவர்கள் சிந்திக்கட்டும்!! என்று பேசி இருக்கிறார்! என்றாலும் குழப்பம் ஊட்டுகிற பேச்சு, பொதுமேடையிலேயிருந்து பேசப் படுமானால் சட்டம் தொடர்பானதாகும் அது! நாளை என்ன நடைபெற வேண்டும் என்று சொல்லித் தருகிறார் காமராசர்!

"தெரியுமா சேதி! காமராசர் கழகத்தைப் போடு போடென்றுப் போட்டுவிட்டார்."

என்று டில்லியிலேயும் பேசுவார்கள்! உள்ளூரிலேயும் பேசுவார்கள்!

புகுந்த வீட்டிலும் மதிப்பு—

பிறந்த வீட்டிலும் மதிப்புப் பெற நினைத்துப் பேசி இருக்கிறார்!

தேர்தல் வரவிருக்கிற நேரத்திலே காமராசர் இப்படிப் பேசி இருப்பது தேர்தலை அமைதியாக நடக்க விடாதீர்கள்! என்ற பொருளும் கொள்ள இடமுண்டு!

காங்கிரஸ், அந்தத் தேர்தலிலே வெற்றி வாய்ப்புப் பெறும் நிலையிலில்லை.

என்பதை எடுத்துக் காட்டுவதாகவும் பொருள் உண்டு.

யார் யார் எந்த எந்தப் பொருளை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளட்டும்

சிரிப்புக்காக—சிந்தனைக்காக—

செயல்படுவதற்காக

வென்று எவரெவருக்கு எது தேவையோ, அவரவர் அதனை எடுத்துக்கொள்ளட்டும்.

நாம் நண்பா, அறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துக் காட்டியிருப்பதுபோல அன்றும் இன்றும் காமராசரையும் — அவரது பேச்சுக்களையும் கவனித்துக் கொண்டுதான் வருகிறோம்! அதனால் அந்தப் பேச்சுக்களைப் படித்துவிட்டு இது ஒரு அதிசயம் என்று கருதி, அந்த இதழினை வீசியெறிந்துவிடுவோம்! நமக்கு வேலைகள் நிரம்ப இருக்கின்றன. ஆற்றவேண்டிய கடமைகள் ஏராளமிருக்கின்றன. நகராட்சித் தேர்தலிலே நாம்நமது வலிவைப்பெருக்கிக் கொள்ளவேண்டியவர்களாகவிருக்கிறோம். அதிலே கவனம் செலுத்துவோம்! காமராசர்கள் சுயமைச்செயலில் கவனம் செலுத்திக்கொண்டிருக்கட்டும்.

அன்புள்ள,

திருவாரூர். முத்துராமன்.

---

10-ம் பக்கம் தொடர்ச்சி

குழந்தையைப்பெறுவதோடு பெற்றவர்களின் கடமை முடிந்து விடுவதில்லையே! குழந்தையைப் பேணி வளர்த்து கல்விச் செல்வத்தைக் கொடுத்து பண்புள்ள வாலிபனாகவோ — யுவதியாகவோ — உருவாக்கி அவனுக்கு—அவளுக்கு — ஒரு புதுவாழ்வும் கொடுக்கும் வரை பெற்றோர்களின் கடமை நீண்டு கொண்டே செல்கிறதே!

இந்த ஏழாவது குழந்தைக்கு பொன்னம்மா என்ன கடமையைச் செய்துவிடப் போகிறாள்?

அது எப்படியாவது சாப்பிட்டு வளர்ந்தால் ட வயிற்றுப் போராட்டத்தில் சிக்கிச் சீரழிவதைத் தவிர வேறு என்ன சுகம் கண்டுவிடும்?

இப்படிப்பட்ட சிக்கல்கள் ஏற்படாமலிருக்க பகுத்தறிவு கண்டுபிடித்த ஒரே வழிதான் குடும்பக் கட்டுப்பாடு! இதை நம் மக்கள் என்று உணர்வார்களோ!

பொன்னம்மாவுக்கு 'சுகப்' பிரசவம் என்ற செய்தியைக் கொண்டு வந்தாள் சுமதி.

அந்த ஏழைக்கு அதாவது சுகமாக நடக்கட்டுமே! ●

# அண்ணா வழி நடப்போம்!

வானுக்கோ அண்ணாவை உவமை சொன்னால்
வண்டமிழை வான்துளியும் கற்ற தில்லை!
தேனுக்கோ அண்ணாவை ஒப்பாய் சொன்னால்
திறன்மிக்க எழுத்தினிலே தோற்றுப் போகும்!
கான்மலரை அண்ணாவுக் குவமை சொன்னால்
கருகிவிடும் தன்மையவர் பேச்சுக் கில்லை!
ஏனிந்த உலகத்தைச் சொல்வோ மென்றால்
இருள்சூழும் தன்மையவர் அன்பிற் கில்லை!
நடிப்புலக வேந்தரென்று கூறப் போந்தால்,
நாவன்மை அமைச்சருக்கு மேலே நிற்கும்!
துடிப்புடனே இளைஞரினை ஈர்ப்ப தற்கோ
துயில்கொண்ட பருவப்பெண் தோற்றுப் போவாள்!
தடிப்பாகப் பேசாத தனிச்சி றப்பால்
தரணியெலாம் 'அண்ணாவை' 'அண்ணா' வென்றார்!
பிடிப்பாக எவ்வுளத்தும் இணைந்த தாலே
பேரின்பச் சுவையெல்லாம் அண்ணா வானார்!

அன்பிற்கும் அறிவிற்கும் ஆற்ற லுக்கும்
அருமையுடன் பேசுதற்கும், எழுது தற்கும்
இன்முகத்தால் போற்றுதற்கும் திருத்து தற்கும்
எடுப்பாக நடப்பதற்கும் முடிப்ப தற்கும்
நன்மனத்தால் சிரிப்பதற்கும் சுவைப்ப தற்கும்
நற்றமிழை வாய்மணக்கப் பேசு தற்கும்
பொன்னொளியாம் அண்ணாபோல் எவரு மில்லை!
பெருமைமிகு அவர்வழியில் நடப்போம் வாரீர்!

—இரா. சேதுராசன்.

4-ம் பக்கத் தொடர்ச்சி

'எப்படி...'

'உன்னைக் கண்டதும் உன் முகத்தில் லட்சுமிக் களை வீசுகிறது என்று நினைத்தேன்...பெயரும் லட்சுமி...பொருத்தம்தானே...!'

'பெயர்தான் லட்சுமி...ஆனால் வீட்டில் அவளது சகோதரிதானே குடி இருக்கிறாள்'

'வேலையா ஒன்றுமே சொல்லுவதில்லையே நிலைமைகளைச் சொல்லி இருந்தால்...'

'வேண்டாம்...வேண்டாம்...உங்கள் புண்ணியத்தால் நாங்கள் வயிறார உண்டு கொண்டிருக்கிறோம். அது போதாதா...?அதிக ஆசைப்படுவது அற்பத்தனம் என்பதை தாத்தா நன்றாக அறிவார்...

'சரி...சரி...தாத்தாவைப் பார்த்துவிட்டு வரலாம்...புறப்படு...,

உங்களுக்கு ஏன் சிரமம்......நான் போய்ச் சொல்லுகிறேன்...'

'வேண்டாம்..,...வேண்டாம்......என்னைப்போல யாராவது உன்னிடம் நடந்துகொண்டால்...'

'ஏன் உங்களைப்போல என்று சொல்லுகிறீர்கள்.........நீங்கள்தான் திருந்திவிட்டீர்களே...!'

ஆமாம்......ஆமாம்.,...நேற்றைய ராஜுவைப்போல என்று சொல்லி இருக்கவேண்டும்......

அவள் கலகலவென்று சிரித்தாள், மகிழமலர்கள் உதிர்வதைப்போல!

காரின் முன்சீட்டில், அவன் அருகில் அவள் அமர்ந்தாள், அவளை அவன் ஓரக்கண்களால் பார்த்தான்.

'அவன் பார்த்த நோக்கத்தை அவள் புரிந்துகொண்டு, 'நான் உங்கள்அருகில் அமருவதற்குப் பயப்படவில்லை; உங்கள் பக்கத்தில் நான் பத்திரமாக இருப்பேன் என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டாகிறது ...ஆனால் உங்கள் அருகில் அமரும் அந்தஸ்து......'

லட்சுமி......அன்பு சாம்ராஜ்யத்தில் அந்தஸ்துக்கே இடம் இல்லை...மிகக் கேவலமாக நடந்துகொண்ட என்னை மன்னித்திருக்கிறாயே அதற்கு முன்னால்......என் அந்தஸ்து சிறு துரும்பு...'

மீண்டும் மீண்டும் என்னைப் புகழ்கிறீர்களே......புகழ்ச்சி ஒரு அபாயகரமான போதை. அந்தப் போதையில் சிக்கிக்கொண்டால் விடுபடுவதே கஷ்டம். அது ஒரு நாளைக்கு நம்மைத் தலைக்குப்புற விழச்செய்துவிடும்'.

'பெரிய பெரிய கருத்துக்களை எல்லாம் சொல்லுகிறாயே லட்சுமி,...நீ எவ்வளவு படித்திருக்கிறாய்?

மறைந்த நமது குலதெய்வம் அறிஞர் அண்ணாவின் தயவாலே கல்லூரியில் காலெடுத்து வைத்திருக்கிறேன். கல்லூரியில் நான் கற்பதைவிட, அனுபவக்கல்லூரியில் நிறைய கற்றிருக்கிறேன்...'

'கல்லூரிப் படிப்பு என்கிற வைரம் அனுபவக் கல்லூரியில்தான் பட்டைத் தீட்டப்பட்டு ஒளி உமிழ்கிறது...' என்று கூறி ராஜு ஒரு பெருமூச்சு விட்டான்...

'எதற்காக இந்த பெருமூச்சு...?' என்றாள் அவள்...

'இரண்டு கல்லூரிகளிலுமே நான் தோல்வி அடைந்துவிட்டேன்'

'அடுத்தடுத்து முயன்றால் வெற்றித் தேவி நிச்சயம் உங்களுக்கு மாலை சூட்டுவாள்'

'இன்றுதானே நான் புதிய பாடத்தைக் கற்கத் துவங்கி இருக்கிறேன். என் வாழ்க்கைச் சரித்திரத்தில் இன்றுதானே புதிய அத்தியாயமே துவங்குகிறது'

'அது நல்ல ஆரம்பமாக இருக்கட்டும். இனி உங்கள் வாழ்க்கை ஏட்டில் எழுதப்படும் எழுத்துக்களெல்லாம் பொன் எழுத்துக்களாக இருக்கட்டும்...உங்களுக்கு என்னுடைய வாழ்த்துக்கள்!'

'நன்றி... லட்சுமி...நன்றி...இந்த உற்சாக மொழிகளை—உன் நல்வாழ்த்து முத்துக்களை என் இதயத்திலே ஏந்தி நடப்பேன்...அந்த முத்துக்கள் நான் நல்ல பாதையில் நடைபோட ஒளி வீசிக்கொண்டே இருக்கும்...'

'நன்றி...நன்றி என்றுகூறி என்னை கடன்காரியாக்கிவிடாதீர்கள். நான் ஏழை!'

'செல்வத்தில் நீ குசேலர்; ஆனால் சிந்தனையில் நீ குபேரர்!'

'பார்த்தீர்களா......மீண்டும் என்னைப் புகழ்கிறீர்களே...போதும் பேசினது...பேசாமல் காரை ஓட்டுங்கள் ...நான் வழி சொல்லுகிறேன்...'

'At—your Sorvice.........yours obediently......'

'உஷ்...'

'உஷ்...'

'உஷ்' என்று ஹாரன் ஒலி எழுப்பிக்கொண்டே கார் ஓடியது.

சிங்காரச் சென்னையின் புண்களாகக் காட்சி தரும் ஓர் குடிசைப் பகுதியில் கார் நின்றது!

இருவரும் இறங்கி, பாதையில் ஓடும் சாக்கடையைத் தாண்டி—சாலையில் படுத்து உறங்கிக்கொண்டிருந்த மனிதப் பூச்சிகளை மிதித்து ...லட்சுமியின் குடிசையை அடைந்தனர்.

'தாத்தா ... தாத்தா என்று கூப்பிட்டுக்கொண்டே லட்சுமி உள்ளே சென்றாள். ராஜுவும் அவளைப் பின் தொடர்ந்தான். மங்கலான ஒரு காடை விளக்கு மங்கிய ஒளியை வீசிக் கொண்டிருந்தது!

'தாத்தா — தாத்தா' என்று அழைத்தவாறு லட்சுமி வேலைய்பாவைத் தொட்டாள்! வேலைய்யாவின் உடல் ஜில்லென்று இருந்தது! தாத்தா—தாத்தா என்று புரட்டிப் பார்த்தாள்! ஆனால் வேலைய்யா பேசவே இல்லை. அசையவும் இல்லை!

'ஐயோ! தாத்தா! என்னை மோசம் செஞ்சிட்டீங்களே! என்னை அனாதையா விட்டுட்டுப் போயிட்டீங்களே!' என்று கதறியவண்ணம் லட்சுமி, வேலைய்பாவின் சடலத்தின்மீது விழுந்தாள்!

ராஜு திடுக்கிட்டு நின்றான்!

...சிரியர், வெளியிடுபவர் சி.என்.ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம் ...திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.